
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது ஆண்டு வைகாசித்திங்கள் 10—6—63 [ இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்



ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

உள்ளிருந்தே யென்று
  முணர்த்துகினும் கண்டில
உள்ளும் புறம்புமா [ரென்(று)
  வோமென்று—மெள்ள
நரருருவாய் ஆரூரில்
  வந்தான் நமையாண்
டருள்புரிஞா னப்பிரகா
  சன். (6)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சொ. சிங்காரவேலன், M. A.,

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 | 10-6-63 | இதழ் 7

## உட்பொருள்

எண் பக்கம்

1 சிவானந்த வெள்ளம் ... 337
2 வணக்கம் ... 342
3 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை ... 343
4 முத்தி நிச்சயம் ... 349
5 சித்தாந்த வினாவிடை ... 353
6 தொல்காப்பியச் சொல்லதிகார — விளக்கக் கட்டுரைகள் ... 357
7 சஹஸ்ராகமம் ... 361
8 மணிமேகலை ... 363
9 'இணையுண்டோ ?' ... 369
10 திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு ... 372
11 செய்திகள் ... 381
12 அப்பர் அவதாரத் தலத்தில் கும்பாபிஷேகம் ... 388
13 எதிர்காலம் ... 393
14 திருக்குறள் - கருத்துரை 25

உ
குருபாதம்
# ஞானசம்பந்தம்
தருமையாதீனத் திங்கள் இதழ்
மலர் 22 ] சோபகிருது - வைகாசி - 10—6—63 [ இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## சிவானந்த வெள்ளம்

எல்லா உயிர்களும் விரும்புவது இன்பத்தையே; ஆனல், அதற்கு எதிராக அவைகள் பெரும்பாலும் அடைந்து வருவது துன்பமே. இதற்குக் காரணம் யாது? எது இன்பம் எனவும், எது அவ்வின்பத்தை அடையும்வழி எனவும் அறியாமையும், அறிந்து அவ்வழியில் முயலாமையுமேயாம். இந்நிலையை உயிர்களுக்கு உண்டாக்கியது எது? 'பாசம்' என்னும் தடையே. எனவே, பாசத்தினின்றும் விடுதலை பெறுவதே, உயிர்கள் துன்பத்தினின்றும் நீங்குதற்கும், தாம் கருதிய இன்பத்தில் இனிது திளைப்பதற்கும் இன்றியமையாத சிறந்த காரணமாகும்.

தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

உள்ளிருந்தே யென்று
  முணர்த்துகினும் கண்டில
உள்ளும் புறம்புமா   [ரென்(று)
  வோமென்று—மெள்ள
நரருருவாய் ஆரூரில்
  வந்தான் நமையாண்
டருள்புரிஞா னப்பிரகா
  சன்.   (6)

---

ஆசிரியர் ;-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சோ. சிங்காரவேலன், M. A..

---

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ‖ 10-6-63 ‖ இதழ் 7

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | சிவானந்த வெள்ளம் | ... 337 |
| 2 | வணக்கம் | ... 342 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை | ... 343 |
| 4 | முத்தி நிச்சயம் | ... 349 |
| 5 | சித்தாந்த வினாவிடை | ... 353 |
| 6 | தொல்காப்பியச் சொல்லதிகார — விளக்கக் கட்டுரைகள் | ... 357 |
| 7 | சஹஸ்ராகமம் | ... 361 |
| 8 | மணிமேகலை | ... 363 |
| 9 | 'இணையுண்டோ ?' | ... 369 |
| 10 | திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு | ... 372 |
| 11 | செய்திகள் | ... 381 |
| 12 | அப்பர் அவதாரத் தலத்தில் கும்பாபிஷேகம் | ... 388 |
| 13 | எதிர்காலம் | ... 393 |
| 14 | திருக்குறள் - கருத்துரை | 25 |

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது – வைகாசி – 10—6—63 [ இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## சிவானந்த வெள்ளம்

எல்லா உயிர்களும் விரும்புவது இன்பத்தையே; ஆனால், அதற்கு எதிராக அவைகள் பெரும்பாலும் அடைந்து வருவது துன்பமே. இதற்குக் காரணம் யாது? எது இன்பம் எனவும், எது அவ்வின்பத்தை அடையும்வழி எனவும் அறியாமையும், அறிந்து அவ்வழியில் முயலாமையுமேயாம். இந்நிலையை உயிர்களுக்கு உண்டாக்கியது எது? 'பாசம்' என்னும் தடையே. எனவே, பாசத்தினின்றும் விடுதலை பெறுவதே, உயிர்கள் துன்பத்தினின்றும் நீங்குதற்கும், தாம் கருதிய இன்பத்தில் இனிது திளைப்பதற்கும் இன்றி யமையாத சிறந்த காரணமாகும்.

தலை காரணமாகத் துன்புறும் நிலையில், போதிய அறி வின்மையால் உயிர்கள் எவ்வெவற்றையோ - மண்ணையோ, பெண்ணையோ, பொன்னையோ, பிறவற்றையோ 'இன்பம்! இன்பம்!' என நினைக்கின்றன; நினைத்து முயன்று அடை கின்றன; அடைந்த பின் அவை இன்பமாய் இல்லாது துன்பமாய் இருத்தலை அறிந்து ஏமாற்றம் எய்துகின்றன. இது, கானலை நீர் என்று எண்ணி ஓடி இளைக்கும் மானின் நிலைபோன்றது.

கானலை நீர் என்று நினைக்கும் மானுக்கு முதலில் அவ் வாறு நினைக்கும் அறியாமை நீங்கவேண்டும்; பின்பு, நல்ல நீர் உள்ள பொய்கை அல்லது நதி இருக்குமிடம் தெரிய வேண்டும் அதுபோல, உயிர்களுக்கு முதலில் இன்பம் அல்லாத பொருள்களை இன்பம் என நினைக்கின்ற அறியாமை நீங்கவேண்டும்; பின்பு எது உண்மையான - துன்பம் என்பது சிறிதும் இல்லாத - என்றும் அழியாத இன்பம் என்பது தெரியவேண்டும்; தெரிந்து அவ்வின்பத்தைப் பெறும் நிலையே, 'முத்தி' எனப்படுவது.

மூவாசையால் அடையும் இன்பம் சிறிது; அவ் வின்பத்தைவிடத் துன்பம் மிகப் பெரிது; அதனால், அவ் வாசையை அறுத்துப் பேரின்பத்திற்கு வழிகாட்டத் தோன்றி யனவே சமயங்கள். அவைகளுள் சிறந்தது சைவசமயம்.

புறமும் அகமும் ஆகிய பிற பிற சமயங்கள் பேரின்ப நிலையாகிய முத்தியைப் பலப்பல வகையாகக் கூறுகின்றன. ஆயினும் உண்மைப் பேரின்பமாகிய சித்தாந்தமுத்தி இது என்பதனை மெய்கண்டதேவ நாயனார், அருணந்திதேவ நாயனார், உமாபதிதேவ நாயனார் ஆகிய சந்தானாசாரியர்கள் தங்கள் சித்தாந்த நூல்களில் உள்ளங்கை நெல்லிக்கனி போல இனிது எடுத்து விளக்கியுள்ளார்கள். இவ்விளக்கத்திற் குரிய பொருள்களெல்லாம் சமயாசாரியர்களது திருமுறை களில் இலை மறை காய்போல் போதிந்துள்ளன.

சித்தாந்த முத்திக்கு மாறுகக் கூறும் பாடாணவாதம், சிவசம வாதம், சிவசங்கிராந்த வாதம் முதலியவைகள் எல்லாம் சந்தான குரவர்களது விளக்கத்தால் வலிகுன்றி மறைந்தன. அவர்கட்குப் பின்னே, 'ஆன்மாநந்த வாதம்' என்ற புதியதோரு வாதம் தோன்றிற்று. 'முத்தியில் ஆன்மா தன் இன்பத்தைத்தான் அனுபவிக்கும்; தனக்கு வேருகிய சிவனது இன்பத்தைத் தான் அனுபவிப்பது இல்லை என்பதுதான் இந்த வாதம்.

இது பேரியதோரு விபரீத வாதமாகும். முத்தியில் ஆன்மா சிவனேடு இரண்டறக் கலத்தலாகிய சிவசாயுச்சியத்தைப் பேற்று, அவனது எண்குணங்களும் தன்னிடத்து அமைந்து விளங்க, எல்லை இல்லாச் சிவானந்தத்திலே திளைத்திருக்கும் என்பதைச் சித்தாந்த நூல்களும் உரைகளும் இனிது எடுத்து விளக்கியிருக்கவும், சிவன் இன்பப் போருள் என்பது தோன்றவே சமய குரவர்கள் அவனை, தேன் என்றும், பால் என்றும், கரும்பு என்றும், அமுதம் என்றும், மாளா இன்ப மாகடல் என்றும் பலவாறு போற்றி இருக்கவும், முத்தியில் ஆன்மா சிவனது ஆனந்தத்தை அனுபவியாமல் தனது ஆனந்தத்தையே அனுபவிக்கும் என்ற ஒரு விபரீத வாதம் எழுமானல். அதனை அப்போழுதே அகற்றுதல் மிகமிக இன்றியமையாததோன்ருகும்.

முத்திநிலையைப் பற்றி முடிவு கூற வேண்டிய இச் சேயலுக்கு வேறுங் கல்வி அறிவுடையார் உரியவரோ? ஆசான் அருளாலே மேய்ப் போருளைக் கேட்டுச் சிந்தித்துத் தேளிந்து நிட்டை கூடிச் சாக்கிரத்தே அதீதத்தைப் புரிதலாகிய நிட்டை நிலையில் உலகப் பற்று அற்றுச் சிவானந்தத்தில் திளைத்திருக்கும் சிறந்த சிவானுபூதிச் சேல்வர்களன்ரே அதற்கு உரியவர்கள்? அத்தகைய பேரியோர் எளிதில் கிடைப்பரோ?

தமிழ் நாடு தவம் உடைய நாடன்ரே? அத்தவத்தின் பயனுகக் கமலை ஞானப்பிரகாசராம ஞானசாரியர்க்கு ஞானப்

புதல்வராய் அமைந்து, தருமை ஆதீன ஞான பீடத்தில் ஆதிபரமாசாரிய மூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளே அதனைச் செய்தருளினார்கள். அவ்வாறு செய்தருளிய சாத்திரமே 'முத்தி நிச்சயம்' என்னும் சீரிய நூல்.

இதில் எந்த முத்தியை உண்மை முத்தி - சித்தாந்த முத்தி - என்கிறார்கள் பரமாசாரிய மூர்த்திகள். சமய குரவரும், சந்தான குரவரும் காட்டிய முத்தியைத்தான் உண்மை முத்தி என்றும், 'அந்த உண்மை முத்தி இதுதான் என்று நிச்சயிப்போம்' என்றும் அவர்கள் தொடங்கியுள்ளார்கள். அந்தத் திருப்பாட்டு இதோ காட்சியளிக்கின்றது.

சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் - முந்தவே
எந்தமுத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம்.

இவ்வாறு தொடங்கி ஒவ்வொரு கருத்தாக எடுத்து வினாவிடை முறையில் ஆன்மானந்த வாதம் பொருந்தாமைக்கு உரிய காரணங்களை எடுத்துக்காட்டிச் செல்லும் முறை மிகவும் அழகியதொரு முறையாம். அவைகளில் ஒரு கருத்து மிக அழகாக அமைந்துள்ளது. 'ஆன்மாவினிடத்து உள்ள இன்பத்தையே இறைவன் அதன் உள்ளிருந்து வெளிப்படுத்துகிறான் என்கின்றாய்? அப்படியாயின், நீ உன் ஆனந்தத்தைக் கண்டதல்லது முத்தியிலும் இறைவனைக் கண்டவன் அல்லை; அன்றியும், 'பெறுவானும் பேறும் ஒன்றாகா' என்று வேதாகமங்கள் சொல்லியிருக்க, நீ உன் ஆனந்தத்தையே பெறுவதாக இரண்டையும் ஒன்றாகவே கூறுகின்றாய்' இதுபோல மற்றும் பல அழகிய அரிய கருத்துக்கள் உள்ளன.

முடிவாக, முத்தியில் ஆன்மா அனுபவிப்பது சிவனது ஆனந்தத்தையே; அந்தச் சிவானந்தத்தை ஆன்மாவின் ஆனந்தமாகக் கருதுவது விபரீத ஞானமாம். இன்னும்

முத்தியில் ஆன்மா சிவத்தினது உதவியை வேண்டாது சிவம்போலவே நிற்கும் என்னும் சிவசமவாதமும் அப்படிப் பட்டதே. மற்றவைகள் எல்லாம் செவ்வையாக விளங்கி விட்டாலும், முத்தி இன்பத்தைப்பற்றி இந்த விபரீத ஞானம் நீங்காதிருப்பதும் மலத்தின் வாசனையே. அந்த வாசனையும் பற்றறக் கழிந்து, சிவனது இன்பமாகிய சிவானந்தத்தில் திளைத்து, அதுவேதானய் இருப்பதுதான், பரமசிவன் அருளிய திவ்விய ஆகமங்களில் முடிந்த முடிவாகச் சொல்லப்பட்ட சித்தாந்த முத்தி என்பதைச் சிறிதும் ஐயம் இன்றித் தெளிக என்று அருளிச்செய்துள்ளார்கள்.

உள்ள மலம்நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளம் திளைத்ததுவாய் மேவுதலே - கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தினெத் தேறு.

தருமையாதீனத்தில் முதற்பெருங்குரவர் குருபூசை (12—6—63) யை யோட்டித் திருநேறிய தெய்வத்தமிழ் மாநாடு நிகழ்கின்றது. இத்திருநாளில் இப்பரமாசாரிய சுவாமிகளது அருளுரையைச் சிந்தித்துத் தெளிவது சிறப் புடையதாகும்.

ஆதி பரமாசாரிய சுவாமிகளது இந்த அருளுரையை உலகம் கேட்டுச் சிந்தித்துத் தெளிவுபெற்றுத் துன்பம் நீங்கிச் சிவானந்த வெள்ளத்திலே திளைப்பதாக.

---


## குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்,

# வணக்கம்

தருமநெறி வழுவாத பாரதநாட்டில் இன்னும் போரைப் பற்றிய அச்சம் நீங்கவில்லை. பாரதநாட்டின் ஆயத்தஏற்பாடுகள் மிகச்சிறந்து விளங்குகின்றன. இடர்களையாய் என்று இறைவனை வேண்டி விண்ணப்பித்தலே செய்யக்கூடியது. அதுவும் வடதிருமுல்லைவாயில் இறைவனை நோக்கித் திருநாவலூரர் பாடியருளுகின்ற பதிகம் நம் உள்ளத்தே ஒளி பரப்பவேண்டும் என்று விளக்குகின்றூர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள். அவர்களது ஏழாம் திருமுறை அருளுரை இக்கருத்தைப் பல மேற்கோள்களுடன் விளக்குகின்றது.

தருமையாதீன ஆதிபரமாசாரிய சுவாமிகளின் குருபூசையை (12—6—63) ஒட்டி அப்பெருமானுர் அருளிய முத்தி நிச்சயம் பற்றிய அரிய கட்டுரையொன்றும் வெளியாகிறது. சிவானந்த வெள்ளத்தில் திளைக்கும் சிந்தாந்த முத்தியின் சிறப்பை விளக்கும் இக்கட்டுரை.

மணிமேகலை மலர்வனம் புகுவதற்கு முன் மாதவியுடன் உரையாடும் காட்சி, மாதவியின் பண்புநலனை அறிந்து இன்புறத் தக்க இடம். இந்த இடத்தை இவ்விதழில் சித்திரிக்கிறூர் ஆசிரியர். சித்தாந்த வினவிடையும், தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரையும், திருவாமூர் அப்பர் சுவாமிகள் ஆலய கும்பாபிஷேக விளக்கமும், ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாட்டு நிகழ்ச்சிகளும், சஹஸ்ராகமம் முதலிய எல்லாம் வழக்கம்போல் இதழ்க்கு மெருகேற்றுகின்றன.

அன்புலகின் கரங்களில் ஆதிபரமாசாரியரின் அருளுரை முதலிய கருத்தழகு தவழ இப்படித் தனிச்சிறப்புடன் வருகிறது இவ்விதழ்.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய**

# அருளுரை

" திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமா சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ்சுடரே "

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள் அனைத்தும் ஏழாம் திருமுறையாக விளங்குகின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாவலூரிலே திருவவதாரம் செய்தருளி இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றுத் திருப்பதிகங்கள் அருளி அற்புதங்கள் பல புரிந்தருளித் திருக்கயிலாயத்திற்கு வெள்ளானையின் மேல்சென்று வீற்றிருந்தவர். பெரிய புராணம் தோன்றுவதற்குக் காரண கருத்தா இவர்களே. தொகை, வகை, விரி என்ற வகையிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனால் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுத் தொடர்ந்து பாடியருளிய திருப்பதிகம் திருத்தொண்டத்தொகை ஆகும். இது தொகை. இதனை முதலாகக்கொண்டு திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளியது திருத்தொண்டர் திருவந்தாதி. இது வகை. சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் இவற்றின் விரியாக விளங்குகின்றது. இவ்வாறு பெரிய புராணம் தோன்றுவதற்கு மூலகாரணராக இருந்த மூர்த்தி இம்மூர்த்தியே ஆவர்.

பல சந்தர்ப்பங்களில் பல பதிகங்களைப் பாடியருளியுள்ள இப்பெருமானார் வடதிருமுல்லைவாயிலிற் பாடியருளிய பதிகமும் அதன் முதல் திருப்பாட்டும் இங்கு நம் சிந்தனைக்குரியவையாய்ச் சிறந்து நிற்கின்றன. திருவொற்றியூரில் சங்கிலியாரை முந்தை விதியாற் கண்ணுற்று, மகிழடியில் 'உம்மைப்பிரியேன்' என்று சூளுரைத்து மணங்கொண்டார். சிலநாட்களில் வசந்தகாலம் வந்தது. ஆரூர்த் தியாகேசனை நினைந்தருளிய சுவாமிகளுக்கு எப்படியாவது திருவாரூர் செல்ல நினைவு. இறைவன்பால் கொண்ட நல்லன்பு மேம்பட்டது. சூளுரை மறந்தார். 'இத்தனை நாள் என் ஆரூர் இறைவனைப் பிரிந்திருந்த நான் மூர்க்கனேன்' என வருந்தினர். ஒற்றியூர் எல்லையைத்தாண்டியதும்கண்ணொளி இழந்தார். சூள்பிழைத்ததால் வந்த துயர் என உணர்ந்து எழுத்தறியும் பெருமானைப் போற்றி ஆரூர் செல்வாராகி வட திருமுல்லைவாயிலுக்கு வந்து தம்கண்ணொளி இழந்த துயரத் துடன் இத்திருப்பதிகம் பாடித்தொழுகின்றார். இத்திருப்பதிகத் தின் உள்ளுறைபொருள் எண்ண எண்ண நெஞ்சை நெகிழ்விக் கின்றது.

இறைவன் ஆடுகின்றான்; லயமும் சதியும் பிழையாத வகை யில் ஆடும் அந்த அற்புதத் தனிக்கூத்தை உமையவள் கண்டு களிக்கின்றாள். அவ்வாறு ஆடிய அழகனை எங்கே எங்கே என்று தேடுகின்றார்களாம்; அப்பெருமானே திருமுல்லைவாயிலுக்கு வந்துவிட்டானாம். செண்பகச்சோலை சூழ்ந்த பகுதியில் உள் ளான்; 'சங்கிலிக்காகத் தம் கண்கொண்ட பண்பன்' அவன் எனப் பகர்கின்றார்கள். 'நான் குற்றங்கள் பல செய்தாலும் குணமெனக் கொள்ளும் உன் கொள்கையால் மிகைபல செய் தேன்; இனி, எல்லியும் பகலும் பணியது செய்வேன்; என்னை அன்று வெண்ணெய்நல்லூரில் ஆட்கொண்ட சம்பு அல்லவா நீ! நீ மார்க்கண்டன் பொருட்டுக் காலனை மாளக்காலினால் செகுத்த சிட்டன் அல்லவா? பல்கலைப் பொருளே! நான் படுதுயர் களைவாயாக' என்று மேலும் அழகுற இப்பதிகத்தில் உரைத்தருள்கின்றார்கள்.

திருமுல்லைவாயிலின் இயற்கைவளத்தில் சுவாமிகள் பெரி தும் ஈடுபடுகின்றார்கள். சோலையும் காவும் கழனிகளும் சூழ்ந்து அழகு தவழும் அவ்வூர்வளம் சுவாமிகள் திருவுளத்தைப் பெரிதும் ஈர்க்கின்றது. கழனியிலே ஒருகாட்சி. அழகுமிக்குப் பொலிவுடன் விளங்கும் அக்கழனியிலே பொறிபோலும் நிற முடைய வண்டுகள் புதுமணத்துடன் இசைபாடிச் சுழலுகின்றன.

அழகிய தாமரை இருக்கையின்மீது நண்டுகள் வந்து உலவுகின்றன. இவ்வாறு வண்டும் நண்டும் வந்து கழனியில் உலவும் எழிலில் ஈடுபட்ட சுவாமிகள் பின்வருமாறு பாடியருள்கின்றார்கள் :—

" பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும்
அலவன்வந் துலவிட அள்ளல்
செந்நெலங்கழனி சூழ்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்
பாசுபதா பரஞ்சுடரே "

இவ்வாறே திருஞானசம்பந்த சுவாமிகள் திருவீழிமிழலையிலே ஒரு காட்சியைக் கண்டு காட்டியிருக்கின்றார்கள். தாமரைத் தவிசிலே இலைக் குடைக் கீழே நெற்கதிர்கள் சாமரையிரட்ட அன்னம் வீற்றிருக்கும் அழகிய காட்சி; அது இங்கே ஒப்பிடத் தக்கது.

" செறியிதழ்த் தாமரைத் தவிசிற் றிகழ்ந்தோங்கும்
இலைக்குடைக் கீழ்ச்செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே "

இவ்வாறே சேக்கிழார் திருவாக்கிலும் இயற்கை நலம் காட்டும் பகுதிகள் பல. திருவாரூரில் திருப்பதிகங்களைக் கிள்ளைகள் பாடப் பூவைகள் கேட்கின்றன என உரைக்கும் பகுதி முதலியன நம் உள்ளத்தைக் கவர்பவை.

பாலிநதியின் சிறப்பைச் சிவஞானசுவாமிகள் காஞ்சிப் புராணத்திற் பாடுகின்ற அழகு யாவரும் அறிந்ததே. இத் திருப்பதிகத்திலும் அந்நதியின் சிறப்பைச் சுவாமிகள் கூறியருள்கின்றார்கள். சந்தனமரத்தின் வேர்களையும், அகிற் கட்டைகளையும், மயில் இறகுகளையும், யானைத் தந்தங்களையும், முத்துக் குவியல்களையும், பவளக் கொடிகளையும் சுமந்து கொண்டு வேகமாக வந்திழிகின்றதாம் பாலித்திருநதி.

"சந்தனவேரும் காரகிற்குறடும்
தண்மயிற்பீலியும் கரியின்
தந்தமும் தாளக்குவைகளும் பவளக்
கோடிகளும் சுமந்துகொண்டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலாமணியே
பந்தனை கெடுத்தேன் படுதுயர்களையாய்
பாசுபதா பரஞ்சுடரே."

திணைமயக்கம் முதலிய நயங்களுடன் சிவஞான சுவாமிகள் பாடியருளும் பாலிநதி வருணனை இங்கு நினைவிற்குவருகின்றது.

தொண்டைநாட்டை ஆண்ட மன்னன் ஒருவன்; சிறந்த பண்பு நலங்கள் உடைய செம்மல். இம்மன்னனைச் 'சொல்லரும் புகழ்த் தொண்டைமானுக' என்று சுவாமிகளே கூறுகின்ருர்களாயின் இவன்புகழை எடுத்துரைக்கவும் கூடுமோ? அம்மன்னன் வேட்டையாடப் புகுந்தவன் இம்முல்லைவனத்துட் பரிவாரத்துடன் வந்தான். வேட்டையாடித் திரும்பும் சமயம் விரைவாக வந்துக்கொண்டிருந்த யானையின் கால்கள் திடீரென்று முல்லைக்கொடிகளால் கட்டுண்ணக் கண்டான். யானையை விடுவிப்பதற்காக அக்கொடிகளை வாளால் விசி அகற்றச் செய்தான். அந்த முல்லைப் புதருக்குள்ளிருந்த இலிங்கத் திருமேனி ஒன்றையும் அதன் உச்சியிலிருந்து குருதி வழிவதையும் கண்டு விழுந்து அலறி விம்மி இறைஞ்சினுன். அவனுடைய அன்புகண்ட இறைவன் குருதி சொரிவதை நிற்கச்செய்து, தரிசனமும் தந்தான். அந்தத் தொண்டைமானே அவ்விடத்து ஆலயம் கண்டான். அந்த வரலாற்றைச் சுவாமிகள் இப்பதிகத்து மிக அழகாக,

"சொல்லரும்புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்டு
அருளிய இறைவனே"

என்று விளக்குகின்ருர்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் படுதுயர்களைந்த இப்பதிகம் தன்னைப்பாடுவோரனைவருடைய துயரமும் களையுந்தகையது. இதனை உள்ளம் குளிர்ந்து ஏத்தும் வல்லமை உடையவர்களுக்கு நரைதிரை மூப்புத் துன்பங்களும் இல்லை; மரணபயம் இல்லை

என்று சுவாமிகள் முடித்தருள்கின்றார்கள். அவ்வழகிய திருப் பாட்டுப் பின்வருவதாகும்.

"விரைதரு மலர்மேல் அயனொடுமாலும்
வெருவிட நீண்ட எம்மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லைவாயிற்
செல்வனை நாவலாரூரன்
உரைதருமாலையோர் அஞ்சினொடஞ்சும்
உள்குளிர்ந்து ஏத்தவல்லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர் விண்ணவர்க்கரசே"

இவ்வழகிய பதிகத்தின் முதற்றிருப்பாட்டு பலபொருணயங் களைத் தன்னுட்கொண்டு விளங்குகின்றது.

இறைவன் திருவடிகளே திரு, மெய்ப்பொருள், செல்வம் ஆகிய எல்லாம் என்று எண்ணுகின்ற உறுதி சிறப்புடையதாகும். அச்சிறப்பினால் விளையும் செம்மாப்பு ஒருவரை மதிக்காமல் அருளிறுமாப்பு அடையச் செய்யும். 'இறுமாந்திருப்பன் கொலோ' என்று இனிக்கப் பாடிய அப்பரடிகளின் அமுத வாக்கினை இங்குக் கருதுதல்வேண்டும். இறைவனை வாயாரப் பாடுதல்வேண்டும்; திருமுறைகளில் வாயாரப்பாடுதலை வற் புறுத்தும் இடங்கள் மிகப்பல, 'வாயினால் உன்னைப் பரவிடும் அடியேன்' என்கின்றார்கள் சுவாமிகள் :

'என்புருகிப் பாடுகின்றிலை' என்ற திருவாசகமும் காண்க.

ஒவ்வொரு திருப்பாட்டின் ஈற்றிலும் பரஞ்சுடர் என்ற சொல்லை இப்பதிகத்துள் வைத்தது ஒருநயக்குறிப்பாகும். ஊனக் கண்களை இழந்தேனாயினும் மேலான ஒளி வடிவான நின்னை உள்ளத்தே தரிசனம் செய்துகொண்டே இருக்கின்றேன் என்று தம் அன்பின் இடைவிடாமையை அது குறிப்பதாகும்.

'பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை'

என்றும் சுவாமிகள் கூறியருளும் பகுதி ஒப்பிடற்குரியது. பொன்னும் போகமும், மெய்ப்பொருளும் திருவும் எல்லாம் அவன் திருவடிகளே என்று உறுதி உடையவர் சுவாமிகள்.

"இறைவனடி ஞானமே ஞானமென்பர்"

என்றும்,

"சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்ய
சுடர் தோன்றியிடச் சோதி தோன்றுமாபோல்
ஆரியனும் ஆசான்வந் தருளாற் றோன்ற
அடிஞானம் ஆன்மாவின் தோன்றும்"

என்றும், அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளியவாறே திருவடிஞானமே நம் சாத்திரங்களிற் புகழ்ந்து பேசப்பெறுவதாகும். அவ்வாறே இத்திருப்பாட்டின் முதல்வரியிலேயே நம் சித்தாந்தச் செந்நெறியின் பிழிவாகஉள்ள கருத்தைச் சுவாமிகள் விளக்கியருளியுள்ளார்கள். இடர்களையாயென இறைவனை நம்பி ஏத்திவரும் இந்நிலையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளருளியுள்ள இப்பதிகம் ஓதிப் பயன்கொள்ள உறுதுணையாகும்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

We are extremely happy in visiting this ancient and inspiring temple. I must congratulate the authorities on the excellent way it is maintained

(Sd.) Janakiraman,
22—5—63 Regional Inspector, R.M.S.
Madras—2.

On should be fortunate in visiting this temple, I was very much struck by the cleanliness and the courtesy extended to the pilgrims.

(Sd) R. Raghavendra Rao,
1—6—63
First Asst. Registrar, High court, Madras.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிய

# *முத்தி நிச்சயம்

சீர்மேவும் ஆரூர்ச் சிதம்பர நாதனெனும்
பேர்மேவு ஞானப் பிரகாசன் — தார்மேவு
சேவடிகள் போற்றித் திகழ்முத்தி நிச்சயமொன்
ருவ தெனமொழிவேன் யான். (1)

சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் — முந்தவே
எந்தமுத்தி சித்தாந்த மென்ருர்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம், (2)

அந்நிலையா னும்பிறவு மான்மா நந் தத்திறமாம்
என் னிலையே சித்திக்கு மென் றியம்பில் — உன்னிலைதான்
இல்லதென வேநீ யியம்பு மளவைமுதற்
சொல்லுமது கேளாய் துணிந்து. (3)

ஈசன் றனதுசத்தி யின்பருந்து மீசனல்
ஆசறத்தன் சத்தியிலின் பான்மாவு — நேச
முடனருந்து மென்னின்முத்தி யொவ்வாது பாசம்
விடஅதுவாய் நிற்பதுவா மே. (4)

சிற்றின்பம் பேரின்பஞ் சிவகுண மென்றனைநீ
உற்றின் பிரண்டு முணர்ந்திலையோ — சிற்றின்பம்
நாடிற் கருமபல நாதனுருப் பேரின்பம்
நீடிப்ப டிகம்போல் நீ. (5)

---

*குறிப்பு :- ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவைக் குறித்து அன்பர்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

பெறுவானும் பேறுநான் பெம்மானுள் ளுண்டேல்
அறிவாயோ வாநந்த மன்றி — யறிவேனுன்
ஆநந்தங் காட்டி யகத்திருப்ப னுகிலநு
மானந்தான் கண்டறியாய் மற்று. (6)

வேதாக மத்தின் விதித்தமுத்தி தானன்றி
நீதானே யின்பமென்றல் நீதியோ — பேதாய்
பெறுவானீ யாநந்தம் பேறென் றுரைத்த
தறியா திருந்தனை நீ யாம். (7)

உன்னுருவங் கண்டிருப்ப தோகெட்டேன் முத்திசிவன்
தன்னுருவங் கண்டிருக்கத் தக்கதே — முன்னறிஞர்
ஓது சிவன்ருேற்ற மொன்றுமே காண்பரெனும்
போத மறந்தனையிப் போது. (8)

ஈசனையே காண வெனத்தவமுன் செய்ததெலா
மோசமாய் வந்து முடிந்ததே — பாச
வினையகன்ற போதும் விமலனே நின்ருள்
தனையறியா மூடர்க்குத் தான். (9)

தானன்றி நிற்கவெழுஞ் சச்சிதா நந்தனை நீ
யானென் குணமென் னிடும்பென்னே — ஊனநீ
ஞானகுணம் பெற்றின்னு நானு னெனநவிலும்
ஈனகுணம் போனதிலே யே. (10)

தோன்றுபர மாநந்தச் சோதியன்றி நின்னறிவிற்
ருேன்றுசுக முண்டென்ருய் சுத்தப்பொய் — தோன்றுமின்பம்
ஈச னுயிரறிவ தீதன்றி வேறுண்டேற்
பாசமலா தேதுண்டு பார். (11)

அண்ணலைப்போ லாநந்த மான்மாவிற் குண்டாகில்
எண்ணில் பிறப்பிறப்பை யெய்துமோ — கண்ணிருளை
ஓட்டாதோ ஆதவனுக் கொத்தவொளி யுண்டாகிற்
கேட்டாயோ கேட்டிலையேற் கேள். (12)

ஓரின்ப மில்லா துறுமலங்கள் போக்கியிடும்
பேரின்ப நின்குணமென் பேதாய்கேள் · பேரின்ப
நின்குணம்போற் ருேன்றுமது நீயாகை யான்இரும்பு
தன்குணமோ தீயியல்பு தான். (13)

ஆசகற்றி நின்னறிவி லாநந்த மாஞ்சிவனைக்
கூசகற்றி யுன்றன் குணமென்ற — பேசியிடும்
பேயாவா திக்கேது பேசிடில்நீ தானந்த
மாயாவா திக்கே மகன். (14)

என்றும் பிரியா விருளருளா லீங்கவின்பாய்த்
துன்றுசிவ போகமெனச் சொல்லாமல் — உன்றன்
நலம்போக மென்றுரைத்தாய் நாமறிவோ நீயு
மலம்போக முத்தியென்ப வன். (15)

தன்பிரம கீதைவே தாந்தஞ் சிவாகமநூல்
இன்பமுயிர்க் குண்டென் றியம்பியதேல் — இன்பஞ்சீ
வான்மாவிற் குண்டென் றறைந்ததன்று நின்றபர
மான்மாவிற் குண்டென்ற தாம். (16)

சிவசித்தி யைத்திளைப்பர் சீவன்முத்த ரென்னு
மவசத்த மாபா தகமென் — சிவசத்தி
தன்னைப் புணர்ந்ததன்று சாற்றுவமை யுந்தெரியா
தன்னைமுலைப் பாலென் றறி. (17)

சிவசத்தி யைத்திளைப்ப ராதிமுத்த ரென்னு
மவசத்த மாபா தகமென் — சிவசத்தி
தன்னைக்கண் டாங்கருளாற் சச்சிதா நந்தமெனு
மன்னைத் திளைத்துவாழ் வார். (18)

அன்றியுயிர் சற்சித்தே யாநந்த மில்லையதற்
கென்றுபல வாற்ருனு மெய்துவிக்க — நின்ற
முறையாலு மீசனேடு முற்றுஞ் சமதை
யறையாமை கூறியது மாம். (19)

ஆநந்த மின்றி யரன்சமதை முத்தியெனிற்
ருனந்த வேதா கமஞ்சாற்ரு — ஊனம்
படுமே தசகா ரியத்திற் பலவுங்
கெடுமேயொன் ருமெனலுங் கேள். (20)

சிவசமமே முத்தியெனிற் சித்தாந்த மன்ரும்
சிவசமய பேதமெனச் செப்பும் — அவைகளிலே
யொன்றென்பர் வேறெனினு மோரேக தேசமதம்
அன்றெனின்மற் ருேற்கும் அது. (21)

உள்ள மலநீங்கி யோங்கு சிவாநந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே — கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு. (22)

முத்தி நிச்சயம் முற்றிற்று.

# EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Sivalogathiagarajaswami Devasthanam, Achalpuram.

அன்று நல்லூர்ப் பெருமணத்தில் ஞானசம்பந்தர் திருமணம் செய்துகொண்டு மனைவி, உற்றார், தொண்டர் பலரும் ஜோதி யில் கலந்தார் என்பது வரலாறு. அந்த வரலாறு நடந்த கோவில் இதுதான் என்று அறிகிறபோது உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியே ஏற்படுகிறது. இத்திருத்தலத்திற்கு வந்து வழிபாடு செய்யும் பேறு கிடைத்தது இன்று. கோவில் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. திருப்பணி நிறைவேறி ஆலயம் புதுக்கிய அருளை உடையவர்களாய் ஆதீனகர்த்தர் அவர்கள் விளங்கு வார்கள். அந்நன்னாளை எதிர்நோக்கி நிற்போம் நாம்.

(ஒ-ம்.) டி. மு. பாஸ்கர தொண்டைமான்.
திருநெல்வேலி,

(ஒ-ம்.) ஜி. சி. பட்டாபிராமன்,
ஆட்டோமொபைல் டீலர்,
திருச்சி.
7—3—63.

பல நாள் இத்தலத்தை தரிசிக்கவேண்டுமென்ற அவா இன்று கைகூடியது. திருஞானசம்பந்தமூர்த்திகள் உயிர்கள் மேல் கருணை வைத்து சர்வமுத்தியைத்தந்த இத்தலத்தின் பெருமையை யாரே பேசவல்லார். கோவில் சுத்தமாகவும், அலங்காரமாகவும் உள்ளது. சிவாச்சாரியாரும், நிர்வாகிகளும் வழிபாட்டை நன்கு செய்ய உபகாரமாய் இருந்தார்கள்.

(ஒ-ம்.) நல். முருகேச முதலியார்,
ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரி,
1—4—63 டிபுடி செகரட்டரி,
சென்னை சைவசித்தாந்த மகாசமாஜ உபதலைவர்.

இன்று சிவலோகநாதர் தரிசனம் கிடைக்கும் பாக்கியம் கிடைத்தது. கோவில் மிகவும் சுத்தமாகவும், கவர்ச்சிகரமாயும் இருக்கிறது. திருப்பணி வேலையும் நடந்துகொண்டிருக்கிறது. மறுமுறையும் சிவலோகநாதர் தரிசனம் கிடைக்கவேண்டு மென்பது என் அவா.

(ஒ-ம்.) அருணாசலம்,
14—5—63 ஆதரைஸ்டு ஆபீசர், மாயூரம்.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதினத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 22, இதழ் 5, பக்கம் 267 இன் தொடர்ச்சி )

## இலக்கணம்

ஆசிரியர்: பிரமாணங்களின் இயல்புகளையும், அவை பற்றி முப்பொருள்கள் உள்ளன என்பதனையும் விளக்கினமையால் இதுகாறும் சித்தாந்தத்துள் முதலாவதாகிய 'பிரமாணம்' பொதுவாகத் தொகுத்து கூறப்பட்டபடியாயிற்று. இனி இரண்டாவதாகிய 'இலக்கணம்' அவ்வாறு கூறற்பாலது.

மாணாக்கன்: அவ்வாருயின் முப்பொருள்களின் இலக்கணங்களை அருளிச்செய்க.

ஆசிரியர்: 'இலக்கணம்' என்றாலும், 'இயல்பு' என்றாலும் ஒன்றே. ஒவ்வொரு பொருட்கும், 'பொதுவியல்பு, சிறப்பியல்பு' என இரண்டு இயல்புகள் உள. இந்தப் பொது - சிறப்பு இயல்புகள், மேல் அளவை இயல்பிற்கூறிய பொது சிறப்பு இயல்புகள் அல்ல.

அளவியலில் 'பல பொருள்கட்குப் பொதுவாய் உள்ள இயல்பு பொதுவியல்பு' என்றும், 'ஒருபொருட்கு மட்டும் சிறப்பாய் உள்ள இயல்பு சிறப்பியல்பு' என்றும் சொல்லப்பட்டன. சித்தாந்தத்துள் 'ஒருபொருட்கு அதன் தன்மையிலே இயல்பாய் என்றும் உள்ள இயல்பு சிறப்பியல்பு என்றும், 'மற்றொரு பொருளின் சார்பு காரணமாக ஒரு பொருட்கண் உண்டாகி, அச்சார்பு நீங்கியவழி உடன் நீங்கும் இயல்பு பொதுவியல்பு' என்றும் சொல்லப்படும். இவ்விரண்டு இயல்புகளும் முறையே, 'சொரூப இலக்கணம்' என்றும், 'தடத்த இலக்கணம்' என்றும் சொல்லப்படும். ஆகவே, சொரூப இலக்கணம், தடத்த இலக்கணம்' என்னும் பொருளில், சித்தாந்தத்துள் சொல்லப்படும் 'சிறப்பியல்பு, பொதுவியல்பு' என்பனவேறு அளவை முறையிற் சொல்லப்படும் 'பொதுவியல்பு சிறப்பியல்பு' என்பன வேறு; சொல் ஒற்றுமையால் இவைகளை ஒன்ருக நினைத்து மயங்குதல் கூடாது.

மாணக்கன் : நல்லதொரு விளக்கத்தை அருளினீர்கள்: முப்பொருள்களின் சொரூப இலக்கணம் தடத்த இலக்கணங் களை உணர்த்தியருளுதல் வேண்டும்.

ஆசிரியர் : 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களுள் பதி, ஏனை எல்லாவற்றினும் பேராற்றல் வாய்ந்தது; அதனால், அது, 'தன்வயம் (சுதந்திரம்) என்பதை, அளவை முறையிற் சொல்லப்படும் சிறப்பியல்பாக உடையது. எனவே, பசுவும் பாசமும் சுதந்திரம் என்னும் தன்மை இன்றிப் பதியின் விருப்பப் படியே செயற்பட்டுச் செல்வனவாம். மேலும் பசுவும் பாசமும் மற்றொன்றின் சார்பினால் தம் தன்மை மாறுபடும். பதி, அவ்வா றின்றி எந்தப் பொருளின் சார்பினாலும் மாறுபாடாது என்றும் ஒருபெற்றியதாய் இருக்கும். இது பற்றியே பதி, வடமொழியில், 'சத்' என்றும், தமிழ் மொழியில், 'மெய்ப்பொருள், செம் பொருள்' என்றும் சொல்லப்படுகின்றது. சத் தென்பதை, 'உள்ளது' என ஆசிரியர்கள் மொழிபெயர்த்து வழங்குவார் கள். அதற்கும், ' என்றும் ஒரு பெற்றியதாய் உள்ளது என்பதே பொருளாகும். ஆகவே, பிறிதொரு பொருளின் சார்பினால் தன் தன்மை மாறுபடாததாகிய பதிக்கு, பிறிதொன்றை நோக்காது தன்னையே தான் நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல் புகள் சொரூப இலக்கணமும், உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல்புகள் தடத்த இலக்கணமும் ஆகும் என்க. உயிர்களும், 'உலகம்' என்பதனுள் சேர்ந்தனவே.

## பதியின் தன்னியல்பு

உலகத்தை நோக்காது தன்னையே நோக்கி நிற்கும் நிலையில் பதியினிடத்துக் காணப்படும் சொரூப இலக்கணங்கள்: ஒன்றே யாய் இருத்தல் (ஏகமாய் இருத்தல்), காலம் இடங்களால் அளவு படுத்தப்படாமை (அகண்டிதமாதல் - இதுவே உருவின்மை யாதல் அறிக,) அளவுபடாமையால் போக்கு வரவாகிய அசைவு இன்மை (அசலமாதல் - இதுவே செயலின்மையாதல் அறிக.) காட்சிக் கருத்துக்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்டதாதல் (குணம் குறிகள் இன்மை - குறி - பெயர்) முதலியனவாம்.

இனி அளவை முறையிற் பதிக்குச் சொல்லப்படும் சிறப் பியல்பு 'சத்துச் சித்து ஆனந்தம்' என வைதிக சமயங்கள் யாவும் கூறும். அவை ஒருவகையில் பொதுவியல்புமாகற்பாலன. அதனால் சைவாகமங்கள் பதிக்கு அளவை முறையில் சிறந் தெடுத்துக் கூறும் சிறப்பியல்புகள் எண்குணங்களாகும். அவை,

'தன்வயம், தூய உடம்பு, இயற்கையுணர்வு, முற்றும் உணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், முடிவில் ஆற்றல், பேரருள், வரம்பில் இன்பம்' என்பன. இவை முறையே, 'சுதந்திரம், விசுத்த தேகம், அநாதி போதம், சருவஞ்ஞதை, நிராமயம், அனந்தசத்தி, அலுப்த சத்தி, திருப்தி' என வட மொழியிற் கூறப்படும். இவைகளில், 'தூய உடம்பு, பாசங்களின் நீங்குதல்' இவைகளை நீக்கியாயினும், இயற்கையுணர்வை முற்றும் உணர்தலிலும், தூய உடம்பைப் பாசங்களின் நீங்குதலிலும் அடக்கியாயினும் ஆறாகக் கூறுதலும் உண்டு. எவ்வகையிலும் சிறப்பியல்பு நோக்கிச் சொல்லப்படும் இடத்து, பதியாகிய சிவம், 'பரமசிவம்' எனப்படும் என்க.

## பதியின் பொதுவியல்பு

மாணுக்கன் : பதியின் சிறப்பியல்புகளை அருளிச்செய்தீர்கள்; இனி அதன் பொது இயல்பினைத் தெரிவித்தருளல் வேண்டும்.

ஆசிரியர் : தன்னையே நோக்கி நிற்கும் பரசிவம் அந்நிலையினின்றும் நீங்கி உலகத்தை நோக்குங்கால், தனது சிறப்பியல்புகளுள் ஒன்ருய பெருங்கருணை காரணமாக உயிர்களின் பொருட்டுத் தானே தனது விருப்பத்தால் தனது ஆற்றலை (சத்தியை)க் கொண்டு பல்வேறு நிலைகளை உடையதாம். அந்நிலைகள் யாவும் பதிக்குப் பொதுவியல்பு எனப்படும் தடத்த இலக்கணங்களாம். அவை அனைத்தும் பதியினது அனந்த சத்தியாகிய அளவில்லாத ஆற்றலால் வருவனவேயாகலின், பதியினது பொதுவியல்பு யாவும் சத்தியினுல் ஆவனவேயாம். அதனுல் பதி, சொரூப நிலையில் 'சிவம்' என்றும், தடத்த நிலையில் 'சத்தி' என்றும் சொல்லப்படும். சொரூப நிலையில் சத்தி தொழிற்படாது அடங்கியிருத்தலால், பதி, 'சிவம்' என ஒன்றேயாய், தடத்த நிலையில் சத்தி தொழிற்பட, சிவம் அதனேடு அத்தொழிலை யெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால், 'சிவமும் சத்தியும்' என இரண்டாய் நிற்கும். இந்நிலையினையே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்,

> "ஓர்உரு ஆயினை மாணுங் காரத்து
> ஈர் இயல் பாய்"

எனத் தமது திருவெழுகூற்றிருக்கையில் அருளிச்செய்தார். "பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்" என்ற புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பகுதியும் இத்தடத்த சொரூப நிலையினையே குறித்தது.

தடத்த நிலையில் சத்தியினல் பதி பல நிலைகளை உடையதாகும். அந்நிலையில், அதற்கு உருவம் உண்டு; தொழில் உண்டு; அவற்றிற்கு ஏற்ற பலப்பல பெயர்களும் உண்டு. ஆயினும், இவை அனைத்தும் அருள் காரணமாக உண்மையாற் கொண்டனவேயன்றி வெறுங் கற்பனையல்ல. தடத்த இலக்கணம் என்பதனல் கற்பனை என்ற ஒன்றை நாம் அதன்கண் புகுத்திக் கொள்ளுதல் கூடாது. சொரூப இலக்கணம் எப்படி உள்ளதோ? அப்படித் தடத்த இலக்கணமும் உள்ளதே.

சிலர், ஏகான்மவாதிகள் பிரமப்பொருளை 'நிர்க்குணப் பிரமம், சகுணப்பிரமம்' எனக்கூறும் நிலையே, சைவசித்தாந்தம் கூறும் சொருபநிலை, தடத்தநிலை எனக் கருதுகின்றனர். அவ்வாறன்று. ஏகான்மவாதிகள் கூறும் நிர்க்குணப் பிரமம் ஒரு குணமேனும் இல்லாதது; சைவ சித்தாந்தங் கூறும் சொருப சிவம் ஆறு குணம், எட்டுக்குணம், மற்றும் பல குணங்களை உடையது. ஏகான்மவாதிகள் கூறும் சகுணப் பிரமம், கயிற்றில் அரவுபோல, நூற்றுக்கு நூறு வெறும் பொய்த்தோற்றம். சைவ சித்தாந்தங் கூறும் தடத்தசிவம், நூற்றுக்கு நூறு உண்மைப் பொருள். ஆகவே, ஏகான்மவாதிகள் கூறும் நிர்க்குணசகுணப் பிரமங்கட்கும், சைவ சித்தாந்தங் கூறும் சொருப தடத்த சிவங்கட்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஓர் இடத்தில் ஒரு சொல்லையும், மற்ருேர் இடத்தில் அதுபோன்ற வகையில் மற்ருெரு சொல்லையும் கண்டால், அவற்றின் பொருளை என்ன என நோக்காமலே இரண்டிற்கும் ஒரு சமகுறி இட்டுவிடுவது சிலருக்கு வழக்கமாய் உள்ளது. ஆதலின், அவ்வாறு கொள்ளுதல் பொருந்துமாறில்லை. (தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

தருமபுரம் ஆதீனத்தின் ஆட்சிக்குட்பட்டுள்ள வைத்தீஸ்வரன் கோயில் நிர்வாகம் மிகச்சிறந்த முறையில் நடந்துவருகிறது. ஒரே வாக்கியத்தில் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நாஸ்திகர்களும் ஆஸ்திகர்களாக மாறிவிடக்கூடிய அளவில் திருப்பணி நடந்தேறிவருகிறது.

(Sd.) D. Vaidyanatha Aiyar,
Vice Principal, French College,
4, Ambalathadian madam st.,
Pondicheri - 1.

14—5—63

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 22, இதழ் 6, பக்கம் 308 இன் தொடர்ச்சி )

## 2. வேற்றுமை இயல்

**கிளவியாக்கத்தோடு இவ்வியலுக்குரிய இயைபு :—**

கிளவியாக்கத்தில் நான்கு சொற்களுக்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினர் ஆசிரியர். அதனைத் தொடர்ந்து பெயரினது சிறப்பிலக்கணத்தை இவ்வியலில் உணர்த்தவேண்டும். அங்ஙனம் உணர்த்தின் வேற்றுமை இலக்கணம் உணர்த்துதற்கு வேறு இடமில்லை யாதலானும், வேற்றுமை என்பது பெயரும் ஒரு இடைச்சொல்லுமாகலின் (அவனை என்றவிடத்து அவன் என்பது பெயர், ஐ என்பது இரண்டாம் வேற்றுமை உருபு; உருபுகள் அனைத்தும் இடைச் சொற்களாகும்) இதுவும் கிளவியாக்கம் போன்று பொதுவிலக்கணமாக இருத்தலானும், பெயரது இலக்கணங்களில் உருபேற்றலும் ஒன்றுதலின் அவ்வுருபினை முன்னர் உணர்த்திப் பெயரினைப் பின்னர் உணர்த்தல் முறையாகலானும் கிளவியாக்கத்தின் பின் இவ்வியல் வைக்கப்பட்டது என்பர் சேனாவரையர்.

நான்கு சொற்களுக்கும் பொது இலக்கணத்தைக் கிளவியாக்கத்தில் உணர்த்திய ஆசிரியர் பெயரது சிறப்பிலக்கணத்தைத் தொடர்ந்து உணர்த்த வேண்டுதலின் இவ்வியல் பெயரினது இலக்கணமே உணர்த்த எழுந்ததென்றும், பெயரினது இலக்கணங்களுள் உருபேற்றலும் ஒன்றாகலின் அவ்வுருபுகளையும் இவ்வியலில் விளங்க உணர்த்தினர் என்றும் இயைபு கூறுவர் இளம்பூரணர்.

எனினும் இதனைச் சேனாவரையர் மறுப்பர். அவர் கூறுவது வருமாறு :-

இவ்வியல் பெயரிலக்கணத்தைச் சொல்ல வந்ததாயின் பெயரது இலக்கணமாய உருபேற்றல், பயனிலை கோடல், காலந் தோன்றாமை ஆகிய மூன்று இலக்கணங்களையும் முதன்முதல் உணர்த்தவேண்டும். அடுத்து இயைபுபட்ட காரணத்தால் உருபிலக்கணம் உணர்த்திப் பின்னும் பெயரது இலக்கணமே தொடர்ந்து ஒத்ப் பெயரியலென ஓர் இயலாக முடித்திருக்க வேண்டும். அவ்வாறன்றி "வேற்றுமை தாமே ஏழென மொழிப" என வேற்றுமை இலக்கணமே முன் ஓதி, எழுவாய் வேற்றுமை பயனிலைகொண்டு முடியும் எனக் கூறுமுகமாகப் பெயர்கள் பயனிலை கொள்ளும் என்பதையும், உருபுகள் பெயர்களின் இறுதியில்வரும் எனக் கூறுமுகமாகப் பெயர்கள் உருபு ஏற்கும் என்பதையும், பெயரது மூவிலக்கணங்களில் பயனிலை கோடலும் உருபேற்றலும் இங்கு உணர்த்தப்பட்டமையால் காலந் தோன்றாமையாகிய மூன்றாவது இலக்கணத்தையும் இயைபுபட ஓதி இவ்வுருபுகளின் இலக்கணத்தை உணர்த்தும் இயலை வேற்றுமை இயலென்றும், இவற்றது மயக்கமுணர்த்தும் இயலை வேற்றுமை மயங்கிய லென்றும், பெயரது விகாரமாய விளி வேற்றுமையின் இயல்பை யுணர்த்தும் இயலை விளிமர பென்றும் சிறப்பாகப் பிரித்து ஓதிய பின்னரே பெயரது இயல்பினை யுணர்த்தும் இயலைப் பெயரியலெனப் பெயர் கொடுத்துள்ளார் ஆதலானும், இவ்வேற்றுமை இயல் முதலாகப் பெயரியல் ஈறாக நான்கு இயல்களுமே பெயரிலக்கணம் உணர்த்த வந்ததாயின் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது முதலாகிய ஐந்து சூத்திரங்களும் நான்கு சொற்களும் உணர்த்துதற்கு இயைபான பொதுவிலக்கணம் கூறும் சூத்திரங்கள் ஆதலின் இவற்றைப் பெயரிலக்கணம் உணர்த்தும் ஒத்தாகிய வேற்றுமையியலின் முன் வையாது இடைவைத்தல் (பெயரியலில் வைத்தல்) பொருந்தாமையானும், அவர் கூறும் இயைபு பொருந்தாதாம்.

வேற்றுமை அல்லாதன எல்லாம் அல்வழியாதலின், கிளவியாக்கம் அல்வழி இலக்கணம் உணர்த்தியதென்றும், இவ்வியல் வேற்றுமை உணர்த்துகின்றதாதலின் அதனையடுத்து இவ்வியல் வைக்கப்பட்டதென்றும் 'தெய்வச் சிலையார்' கூறுவர்.

வேற்றுமையாவது உருபும் அதுகொள்ளும் பெயரும் அதுகொண்டு முடியும் வினைச்சொல்லும் சேர்ந்ததாகும். அம்முறையில் இவ்வியலும் நான்கு சொற்களுக்குமுரிய பொதுவிலக்கணம் எனலாம். வேற்றுமை இலக்கணங்களை உணர்த்தும்

இயல்களை அடுத்துச் சிறப்பாகக் கூற இருக்கும் பெயருக்கு உரிய பொது இலக்கணமும் (உருபேற்றல், பயனிலை கோடல், காலந் தோன்றாமை) ஈண்டுக் கூறப்படுதலின் அம்முறையால் பொது இலக்கணம் கூறும் இயலாகும் என்றும் கூறலாம். இவ் விரு கருத்துக்களைத் தந்து இயைபு காட்டுகிறார் 'நச்சினார்க்கினியர்.'

## வேற்றுமையாவது யாது ?

பெயர்ப்பொருளை செயப்படு பொருள் முதலாக வேற்றுமை செய்தலின் வேற்றுமை என்பது காரணக் குறியாம். வேற்றுமை உருபினை வேற்றுமை என்பர் நன்னூலார். வேற்றுமை ஏற்கும் பெயரையும் வேற்றுமை என்பர் தொல்காப்பியர். வேற்றுமை கொண்டு முடியும் சொல்லையும் வேற்றுமை என்பர் பிரயோக விவேக நூலார். "உருபேற்றதனையும் உருபையும். உருபு நோக்கி வந்தனையும் வேற்றுமை என்பர்" (வேற் 8) என இலக்கணக்கொத்து ஆசிரியர் கூறுதலும் காண்க.

## வேற்றுமை எட்டும் அவற்றது பெயரும்

வேற்றுமை ஏழென்பர் பிறர் (1) தொல்காப்பியர் விளியை யும், கூட்டி எட்டென்பர் (2) அவையாவன, (1) பெயர் (2) ஐ (3) ஒடு (4) கு (5) இன் (6) அது (ஏ) கண் (8) விளி என் பனவாம் (3)

## முதல் வேற்றுமை :

உருபினையும் விளியினையும் ஏற்காது பிற சொல்லோடு சேராது தனித்து நிற்கும் பெயரே எழுவாய் வேற்றுமையாம் (4). அது ஒரு பொருளினது உண்மைத் தன்மையைக் குறித்துவரும் சொல்லையும், ஏவலைக்குறிக்கும் சொல்லையும். அதனது தொழிலைக் குறிக்கும் சொல்லையும், வினவிற்குப் பொருந்திவரும் சொல்லை யும், பொருளினைக் குறிக்கவரும் சொல்லையும், பெயரைக் குறிக்கும் சொல்லையும் பயனிலையாகக் கொண்டு முடியும் சொல் லாய் வரும்பொழுது அதனைப் 'பெயர்ப்பயனிலை' என்பர் (5).

பெயரொடு பெயரும், பெயரொடு வினையும் சேர்ந்து ஒரு மொழிபோல் வருமாயின் அதனைத் தொகை என்பர். அவற்றுள்

பெயரோடு பெயர் சேர்ந்த தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொண்டு முடியும் (6). பெயர் பயனிலை கொண்டு முடியும்போது பெயர் வெளிப்பட்டும் நிற்கும், வெளிப்படாதும் நிற்கும். பெயர் வெளிப்படாது நிற்றலைத் 'தோன்றா எழுவாய்' என்பர் (7). பெயர்கள் உருபினை ஏற்குங்கால் அவ்வுருபுகள் பெயரது இறுதியிலேயே வரும் (8). வினையாலணையும் பெயர்கள் நீங்கலாக ஏனைய பெயர்கள் காலந் தோன்றா (9).

இரண்டாம் வேற்றுமை :

இதன் உருபு 'ஐ' ஆகும். இது தெரிநிலை வினை குறிப்பு வினை ஆகிய இரண்டின் காரணமாக வரும் செயப்படுபொருளைப் பொருளாகக்கொண்டுவரும் (10)செயப்படுபொருள் இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதும் என மூவகைப் படும். இம் மூன்றற்கும் பொதுவாகவே வாய்பாடுகளைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். எனினும் அவற்றை வகைப்படுத்திக் காட்டுவர் சேனவரையர். அவர் கூறுவது வருமாறு.

(அ) இயற்றப்படுதலாவது முன்னில்லதனை உண்டாக்குதல் என்னும் பொருள்படும். இதற்குரிய வாய்ப்பாடு இழைத்தல் என்பதாம்.

(ஆ) வேறுபடுத்தலாவது முன்னுள்ளதை வேறுபடுத்துவதாகும். இதற்குரிய வாய்பாடுகள் ஒப்புதல், இழத்தல், அறுத்தல், குறைத்தல், தொகுத்தல் பிரித்தல், ஆக்கல் சிதைத்தல் என எண்வகைப்படும்.

(இ) எய்தப்படுதலாவது இயற்றுதலும் வேறுபடுத்தலுமின்றி தொழில் பயன்படும் முறையில் நிற்றல் ஆகும். இதற்குரிய வாய்பாடுகள் காத்தல், ஒத்தல், ஊர்தல், புகழ்தல், பழித்தல், பெறல், காதல். வெகுளல், செறல், உவத்தல், கற்றல், நிறுத்தல், அளத்தல், எண்ணல், சார்தல், செலல், கன்றல், நோக்கல், அஞ்சல் எனப் பத்தொன்பது வகைப்படும். (11).

(தொடரும்)

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 22, இதழ் 6, பக்கம் 316 இன் தொடர்ச்சி )

षड्विंशद्धस्त दीर्घस्या दष्टताल सुविस्तरम् ।
वितानं लंवयेन्मध्ये यागवेश्मनिदेशिकः ॥ 191

இருபத்திநான்கு முழ நீளமுள்ளதாய் எட்டு தாலஅளவு அகலமுள்ளதான விதானத்தை யாகசாலையின் நடுவில் கட்டித் தொங்கவிடவேண்டும்

रम्भाम्र नाळिकेरैश्च मुक्तादामसु पुष्पकैः ।
इक्षुप्रवाल तांबूल लताभिश्च विभूषयेत् ॥ 192

மற்றும் வாழை, மாங்கொத்து, தென்னம்குலை, முத்துச்சரம், புஷ்பசரம், கரும்பு, பவழமாலை, வெற்றிலைக்கொடி முதலியவை களால் அலங்கரித்து அழகு செய்ய வேண்டும்,

भूतवेदाग्नि दर्भैवा व्योमहस्तं प्रलंबयेत् ।
अंतरं चतुरङ्गुल्यं चूतपल्लव शोभितम् ॥ 193

யாகசாலையின் சுற்றிலும் தர்ப்பமாலை தொங்கவிட வேண்டும் அதாவது ஐந்து நான்கு மூன்று தர்ப்பங்களால் ஒவ்வொரு முழம் ஒவ்வொரு தர்ப்பையைத் தொங்கவிட்டு நீளமாக முறுக்கிக் கட்டவேண்டும். இடையிடையே நான்கு அங்குலம் வெளியிருக்கவேண்டும். அதன் நடுவில் மாவிலை வைக்கப்பட்டு பெருவிரல் பருமனுள்ள கயராக இருக்கவேண்டும். இவ்வாறு தர்ப்பமாலையின் இலக்கணம் கூறப்பட்டது.

गोमयेनोपलिप्याथ रङ्गवल्यादि कारयेत् ।
नानादीप समायुक्तमष्टमंगल संयुतम् ॥ 194

दशायुधैस्समायुक्तं पुण्याहैरभिरक्षयेत् ।

பசுவின் சாணத்தினல் யாகசாலையை மெழுகிக் கோலம் போட்டு பலவகையான தீபங்களால் அலங்கரிக்கவேண்டும். அஷ்டமங்களங்களோடு கூடியதாகச் செய்யவேண்டும (அஷ்ட மங்களம் என்பது கண்ணுடி, பூர்ணகும்பம், ரிஷபம், இரட்டைச் சாமரம். ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம் சங்கம் தீபம் என எட்டு மங்களத் திரவியங்களாகும்)

स्थण्डिलं शालिभिः कुर्यात् वेदिकोपरि मध्यमे ॥ 195

அவ்வாறே தசாயுதங்களோடு கூடியதாய்ச் செய்து புண்யாவாசனம் செய்து புரோக்ஷிக்கவேண்டும். பிறகு நெல்லும்போட்டு வேதிகையின்மேல் ஸ்தண்டிலம் கல்பிக்கவேண்டும,

द्विशतैः पञ्चविंशत्या व्रीहिभिः पूरितं तु यत् ।
शुक्तिमात्र मितिज्ञेयं मानं तेनैव कारयेत् ॥ 196

இருநூற்துஇருபத்தி ஐந்து நெற்கொண்டதற்கு சுக்த்தி என்று பெயர். இதிலிருந்து அளவைக் கணக்கிடவேண்டும்.

शुक्ति स्थलं प्रकुञ्चश्च प्रसृतिः कुडुपं तथा ।
तथास्यादञ्जलिः प्रस्थः पात्रं चाढक शैवकं ॥ 197

द्रोणं खारि क्रमात्प्रोक्तं द्विगुणं तु पृथक् पृथक् ।
खारि त्रयंतु भारंस्यात् भारादूर्ध्वं नमानकम ॥ 198

சுக்த்தி, ஸ்தலம், ப்ரகுஞ்சம், ப்ரஸ்ருதி, குடுபம், அஞ்சன ப்ரஸ்தம், பாதரம், ஆடகம், சைவம், த்ரோணம், காரி, என்ற ஒன்றைக்காட்டிலும் ஒன்று இரட்டிப்பாகக் கொண்டது. அதற்கு மேல் மூன்று காரி கொண்டது ஒருபாரம். அதற்குமேல் அளவு கூறப்படவில்லை. அதாவது 225 நெல்லுக்கொண்டது ஒரு சுக்த்தி. இரண்டு சுக்த்தி கொண்டது ஒருதலம். இரண்டுதலம் கொண்டது ஒரு ப்ரகுஞ்சம். இதில் இரண்டு கொண்டது குடுபம். இவ்வாறே காரிவரையில் இரண்டிரண்டு பங்குகொண்டதாக ஆகும். மூன்று காரி ஒருபாரம், ப்ரஸ்தம் என்பது ஒருபடி. சைவம் என்பது ஒருமரக்கால் த்ரோணம் என்பது, இரண்டு மரக்கால் (பதக்கு என்றுபெயர்). காரி என்பது நான்கு மரக்கால். பாரம் என்பது ஒருகலம் என்பது அளவையாகும். (தொடரும்)

# மணிமேகலை

[ இலக்கிய நாடகம் ]

"செஞ்சொற்கொண்டல்"
வித்துவான். சொ. சிங்காரவேலன் எம். ஏ.,

( மலர் 22, இதழ் 6, பக்கம் 320 இன் தொடர்ச்சி )

## காட்சி 3.

காலம் : அந்தி மாலை. உறுப்பினர் : மாதவி, மணிமேகலை.

இடம் : மாதவியின் தனி மண்டபம்.

[ மாதவி புத்தர்பிரானின் திருவடிமலர்களை ஏத்திப் பாடுதல் ]

மணி : அம்மா ! தோட்டத்துக் குண்டுமல்லிகை கூடை கூடையாய்ப் பூத்திருக்கிறதம்மா !

மாத : மணிமேகலை ! மலர்களைப் புத்தன் திருவடிகளுக்கு அர்ச்சிப்போம் வாம்மா !

மணி : வானத்தில் வெண்மதி நிலவுவெள்ளத்தில் நீச்சல் போடுகிறுன் !

மாத : ஆம், செல்வமே ! இந்த உலகத்தின் கொடுமைகளை நினைந்து விரைந்து செல்கிறுன் விண்ணுலகப் பாதையில். மணிமேகலை ! கொடுமை நிறைந்த உலகம் இது ! குற்றமறியாத காதலர் - உன் தந்தை - கோவலரை ஆராயாது கொன்ற அறிவீனம் உடைய உலகமல்லவா ?

மணி ; அம்மா ! நடந்ததை நினைத்து வருந்தாதீர்கள் அம்மா !

மாத : மறக்கவேண்டுமென்றுதான் முயற்சி செய்கிறேன்; ஆனல் மனத்தில் முந்தி நிற்பது அந்தச் சிந்தனையாகவே இருக்கிறது மகளே!

மணி : 'விதியே வலியது' என்று அடிக்கடி தாங்கள் என்பால் கூறுவீர்களே! அதன் விளையாடல்தானேயம்மா இது! வருந்திப் பயன்?

மாத : ஆம், மகளே! அந்த நாள் - கடற்கரையிலே - இதே இந்திர விழாவிலே - நானும் உன் தந்தையும் இன்புற்றிருந்த வேளையிலே - எழுந்த கானல்வரியை நினைத்தாலும் நெஞ்சு நோகிறது! அந்தப் பொல்லாத பாடல் - தீங்குடைய பாடல் அல்லவோ உன் தந்தையை என்னிடமிருந்து பிரித்துவிட்டது? அதை நினைத்தால்......... அதை நினைத்தால்.........

( தலையைப் பிடித்துக்கொண்டு அழுதல் )

மணி : ( கண்ணீர் சிந்தி ) அம்மா! என் தந்தையை என் அருமைத் தாயிடமிருந்து பிரித்த பொல்லாத விதியை - எனக்கு மட்டும் ஆற்றலிருந்தால் - தூள் தூளாக்கிவிடுவேன்!

மாத : அன்பின் செல்வமே! அதன்பிறகு எத்தனை ஆண்டுகள்தாம் ஓடிவிட்டன! மதுரைமா நகரத்திலே கொடியவர் சூழ்ச்சியால், கோவலர்.........கொல்லப்பட்டதும்......உன் தாய் கண்ணகிதேவி மதுரையையே கற்புத்தீயால் எரித்ததும், பத்தினித்தெய்வமாக வஞ்சிமா நகரில் விளங்குவதும், அப்பப்பா ............எவ்வளவு மாற்றம்?

மணி : அம்மா! ஊரெல்லாம் ஒரே உற்சாகமாக இந்திர விழாவுக்குப்போய்விட்டுத் திரும்பிவந்துகொண்டிருக்கிருர்கள்... பாட்டிகூட போயிருக்கிருர்கள் போலிருக்கிறதே?

மாத : மணிமேகலே! அம்மாவின் போக்கு, நோக்கம், எண்ணம் எல்லாமே வேறு! பரத்தைத் தொழில் பண்பட்டது; அதில் நான் ஈடுபடுவதில்லே என்பது அவர்கள் குறை! அது மட்டுமில்லே அன்பே! அன்பின் செல்வமான உன்னேயும் நான் அந்த ஆழ்கடலில் தள்ளவில்லே என்பதும் அவர்கள் குறை! அதற்கென்னசெய்வது மணிமேகலே!

மணி : மனிதன் மனம் படைத்தவன்; விருப்பப்படிச் செயலாற்றும் திறம் உடையவன்......

மாத : அதனுல்...

மணி : பாட்டியின் மனம் இழிவை உயர்வாகக் கருதுகிறது; அம்மா ! தங்கள் மனமோ இழிவை இழிவென்றே எண்ணுகிறது! ஆனுல் ஒருவர் மற்ருெருவரை வற்புறுத்துவதுதான் தவறு !

மாத : மகளே ! உன் கூரிய அறிவு என் நெஞ்சைக் கொள்ளை கொள்கிறது ! உண்மைதான் ! அவரவர் வாழ்வை நல்ல பாதையில் நடத்த அவரவர்க்குச் சுதந்திரம் உண்டு ! அதைப் பறிக்க எண்ணும்போதுதான் உரிமை வேட்கை - சுதந்திரதாகம் அதிகமாகிறது மணிமேகலை !

மணி : அம்மா ! பெரிய பெரிய அரசியல் தத்துவங்களும், வாழ்க்கைத் தத்துவங்களும் தங்களை யறியாது வெளிப்படுகின்றன தாயே !......

[ வசந்தமாலை வருதல் ]

மாத : வா, வசந்தமாலை ! வச்சிரக்கோட்டம் போயிருந்தாயா ?

மணி : வழிபாடுநடந்ததா? வளவர்பிரான்வந்திருந்தாரா?

வச : ..................

மாத : வசந்தமாலை ! ஏன் மௌனம் ?

வச : ஆம் ; மௌனமே நல்லதென்று முடிவுகட்டிவிட்டேன் மாதவி !

மாதவி : ஏனடி அப்படி ?

வச் : மாதவி ! உன்பால் மாதக்கணக்காக கூறிவரும் பேச் செல்லாம் செவிடன் காதிலே ஊதும் சிங்காரக் குழலோசையாகி விட்டன......ஆகவேதான்...

மாத : ( காது பொத்தி ) அப்பப்பா... மறுபடியும் அதுவேதானு ? மணிமேகலை! இங்கு வா...புத்தர்பிரான் திருநாமத்தைச் சொல்...புனிதமான நினைவை உண்டாக்கு !

மணி : புத்தம் சரணம் கச்சாமி ! புத்தம் சரணம் கச்சாமி ! புத்தம் சரணம் கச்சாமி !

வச : மாதவி ! பெற்றமனம் துடிக்கிறது ; பெண்மனம் பார்க்கிறது ; இது நீதிதானு ?

மாத : பெற்ற மனத்தைத் துடிக்கவிட வேண்டுமென்று ஒருபோதும் நான் எண்ணியதே இல்லே வசந்தமாலே ! பெற்ற மனம் தழைக்கவேண்டும் ; குளிரவேண்டும் ; இன்புறவேண்டும் ; ஆனுல் பேதைமைநீங்கித் தூய்மை பெறவேண்டும் என்றுதானே கூறுகிறேன் !

வச : இந்திரவிழாவுக்கு நீயும் மணிமேகலேயும் வராதது குறித்து உன் அன்னே சித்திராபதிக்குச் சொல்லொணுதவருத்தம் மாதவி !

மாத : வெளிப்படையாகச் சொல்கிறேன், கணிகையர் தொழில் எனக்குக் கசக்கிறது வசந்தா ! என் மகள் மணிமேகலே யையும் இந்த இழிதொழில்புகுத்தும் எண்ணமே எனக்கில்லே ! அறவண அடிகளின் அறவுரை என்னேத் தீயசெயலில் ஒரு போதும் புகவிடாது ! இது உறுதி !

வச : குலத்தின் பெருமைக்கே குழிவெட்டுகிருய் மாதவி !

மாத : குலப்பெருமை என்று கூருதே ! சிறுமை என்று கூறு தோழி !

வச : ஆராயாத போக்கால் உன் பரம்பரைக்கே களங்கம் கற்பித்துவிட்டாய் மாதவி !

மணி : வசந்தா ! பரம்பரைக்குக் களங்கம் என்று சொல் வதைவிட முடிவு என்று சொன்னுல் நன்ருயிருக்கும் !

வச : தலேக்கோல் பட்டம்பெற்றுத் தமிழர் கலேக்கே தனி விளக்காகத் திகழ்ந்த மாதவி என்ற மணிவிளக்கு இப்போது தன் கலேப்பரம்பரைக்கு இருளேப்பொழிய ஆரம்பித்துவிட்டதா?

மாத : வசந்தமாலே ! சேற்றிலே செந்தாமரை பிறப்ப தில்லேயா ? சிப்பியின் வயிற்றிலே சித்திரமுத்துத் தோன்றுவ தில்லேயா ? களங்கப்பட்ட மரபிலே கவிஞன் தோன்றுவ தில்லேயா ? சிந்தித்துப்பார் ! கணிகையர் குலத்திலே பிறந்து விட்ட குற்றத்துக்காக உடலே விற்கும் ஒழுங்கீனத்துக்கு என் மகளும் உடன்பட்டத்தான் வேண்டுமா ? தமிழ்ப் பண்பை அழிக்கத்தான் வேண்டுமா ? பெற்ற தாய்க்காகக் காரிருளில்

கால்வைக்கத்தான் சொல்கிருயா ?......வசந்தமாலே ! பத்தினித் தெய்வமாகிய கண்ணகிதேவியின் திருமகள் மணிமேகலே ஒருபோதும் பரத்தைத் தொழிலுக்கு உடம்படமாட்டாள் !

( அழுகிருள் )

வச : மாதவி ! உன் தாயின் உள்ளத்தை உரைத்தேன் !... பிறகு நீ சிந்தித்து ஒரு முடிவுக்கு வா......

மணி : வசந்தமாலே ! அம்மாவும் நானும் எப்போதே முடிவுக்கு வந்தாயிற்றே......

வச : ( மகிழ்ச்சியுடன் ). அப்படியா ? என்ன முடிவு ?

மணி : (துயரப்புன்னகையொடு) முடிவு ! ஆம்; வேதனேப் பட்ட பரம்பரைக்கும், வேசியர்குல வாழ்வுக்கும் முடிவு ! தூய அன்பு வாழ்வுக்கு, அறவாழ்வுக்கு, பேரா இயற்கைப் பெரு வாழ்வுக்கு விடிவு !

வச : நான் வருகிறேன் ( சினத்தோடு )

( போகிருள் )

மாத : ( தலே நிமிர்ந்து ) மணிமேகலே ! புத்தபிரான் கருணேயே நமக்குக் கண்கண்ட துணே ! பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் ! பிறவார் பெறுவது பெரும் பேரின்பம். பஞ்சசீலமே நம் நெஞ்சை நிலேநிறுத்துவது !

(மணிமேகலேகரம்குவித்துக் கண்களேமூடி நிற்றல் சுதமதிவருதல்)

சுத : தோழி ! ஏன் கண்ணீர் ?

மாத : ( துடைத்துக்கொண்டு ) ஒன்றுமில்லே சுதமதி ! மணிமேகலே ! மலர்வனம் புகுந்து மலர்பறித்து வாம்மா !

சுத : மாதவி ! மணிமேகலே மட்டும் தனியாகவா ? வேண்டாம் வேண்டாம் ; நானும் துணேக்குப் போகிறேன் ! பெண்மைக்குத் தனிமை என்றுமே பகை ! காத்திருக்கும் வண்டுகள் மலரைக் கண்டால்......இல்லேயா மாதவி ? அதுவு மன்றி இலவந்திகைச் சோலேக்கென்ருல் அங்கே அரசமரபினர் இருப்பர் ! உய்யான வனத்திலோ பூதங்காக்குமென்று சொல்

வார்கள்! சம்பாதி வனத்துக்கோ கவேர வனத்துக்கோ காரிகையார்கள் செல்லுதலும் இயல்பல்ல! உவ வனத்துக்கு வேண்டுமானல் செல்லலாம்?

மணி: அங்கே ஒன்றும் தீங்கில்லையல்லவா, சுதமதி?

சுத: அப்படி ஒன்றும் இல்லை மணிமேகலை! அங்கு ஒரு பளிங்கு மண்டபம் உண்டு!

மாத: அப்படியா? அந்த மண்டபத்தில் என்ன இருக்கிறது?

சுத: ஒரு தாமரைப்பீடிகை இருக்கிறது; அதில் எந்தத் தெய்வத்தை நினைத்து பூவை அருச்சித்தாலும், அவ்வத்தெய்வங்களை அடையும் என்று சொல்வார்கள், மாதவி!

மணி: மனத்தோடு பொருந்திய செயல் கைகூடும்; அல்லாதன கைகூடா என்ற கருத்திலோ?

சுத: ஆம், தோழி! அந்தக் கருத்தில்தான் அப்படிச் சொல்லப்படுகிறது போலும்!

மாத: அப்படியானல் இருவருமாகச் சென்று விரைந்து வந்துவிடுங்கள்......

(போகிருர்கள்) (தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

இன்று இக்கோயிலுக்கு வந்து இறைவழிபாடு செய்யும் மகத்தான பேறுபெற்றேன். நல்ல முறையில் இக்கோயிலில் எல்லாம் அமைந்திருப்பது மிகவும் சிறப்பானதொன்ருகும். சுற்றுப்புறம் சூழ்நிலை தெய்வமணம் தெய்வபக்தி மிக்கு ஓங்க பரிபாலித்துவருவது ஆதீனத்தின் மாண்புறு தொண்டாகும்.

(ஒ-ம்) என். கிருஷ்ணசாமி ஐ. ஏ. எஸ்.
15—5—63 சென்னைமாநில எடை அளவு கட்டுப்பாடு அதிகாரி,
தமிழ்நாடு அரசாங்கம்.

# ‘இணையுண்டோ?’

வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன், M. A.,

சொல்லாண்ட கீர்த்தி வளரும் குமாரன் சுருதியெலாம்
பல்லாண்டு போற்றியும் காணப் பரம்பொருள் பண்டசுரர்
வில்லாண்ட போரில் அழியப் பொருத விறலுடையான்
மல்லாண்ட திண்டோள் முருகன் திருநாமம் வாழ்த்துநெஞ்சே.

சைவம் பரப்பித் தமிழ்பரப்பித்
தையல் பாகன் அருள்பலரும்
உய்வைப் பெறவே பெறவைக்கும்
உயர்ந்த தொண்டு பலசெய்து
தெய்வப் பிறவி எனயாரும்
செப்ப வளரும் பெருந்தவத்தோய்,
மெய்வைத் துயரும் திருக்கைலைச்
சந்நி தானம் வாழியவே. (1)

ஞான மார்சுப் பிரமணிய
நயமார் மாசந் நிதானத்தின்
மான முயரும் திருமுன்னர்
வணங்கி எழுதும் நிருபம்இது;
ஆன அருள்மா முருகனரு
ளதனுல் நல்லேன்; அவ்விடத்துக்
கான மேனிப் பாங்கெல்லாம்
அறிய உணர்த்தல் வேண்டுகின்றேன். (2)

திருவுள் ளத்தின் பாங்கறிந்து
திருவை யாற்றில் ஞாயிறன்று
மருவி எளியேன் ‘குறைவில்லா
நிறைவு’ பற்றிப் பேசினேன்;
பெருமை பெறுநின் அடிபோற்றும்
பீடார் சாமி அன்பு செய்து
அருமைக் கோயில் தரிசனம்செய்
தருளைப் பெறுமா ரமைத்தனனே. (3)

நின்றன் ஆணை வலத்தாலே
நென்னல் செய்ய சடையப்பர்
துன்று கொள்ளி டக்கரையில்
தோற்றம் சிறப்ப எழுந்தருளி
நன்று தீர்த்த வாரிகொள்ளும்
நாளில் அன்பின் அணைக்கரைக்குச்
சென்று சிறிதே அருள்வீரச்
சீர்மை செப்பி உரைவிரித்தேன். (4)

தண்ணம் புனலின் ஓட்டம்; இடை
சாரும் வெள்ளை மணற்பரப்பு:
விண்ணந் தன்னில் முழுநிலவு;
மேனி இனிக்கும் பூங்காற்று;
நண்ணும் இந்தச் சூழலிடை
நாதன் செய்ய சடையப்பன்
கண்ணைக் கவர எழுந்தருளும்
காட்சி கண்டு மனம்நெகிழ்ந்தேன். (5)

தேவத் தானத் தொண்டர் அன்பு
செய்தே வரவேற் றிறைவன்றன்
சேவை பெறுமா செய்வித்தார்;
செப்பும் உரைதான் முடித்தபின்னர்
மேவும் சுவைகொள் பிரசாதம்
மிசைக என்று வழங்கினர்;
ஆவ லுடனந் நதியிடையே
அயின்றேன்; என்னே ஆனந்தம்! (6)

ஐந்து புலனும் அருள்மணக்க
அதற்கு மேலே ஆனந்தம்
வந்து நிரம்ப இறைவனருள்
மனத்தை நிரப்ப அன்பர்சிலர்
உந்து மகிழ்ச்சி யொடுபயில
உணர்ந்த உணர்ச்சிக் கிணையுண்டோ?
இந்த இன்பம் நின்னாலே
எய்திற் றென்ப தனைமறவேன். (7)

கோயில் விளங்கச் சிவம்விளங்கக்
குற்ற மில்லா நூல்விளங்க
மேய புலவர் பலர்விளங்க
விரும்பும் அடியார் குழுவிளங்கத்
தாயின் அன்பு பரப்பிநிற்கும்
சால்பு நின்பாற் கண்டுவந்தேன்
ஏய நின்சீர் மிகவாழ்க!
என்றும் ஓங்கி வாழியவே! (8)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I visited this temple this day. I have the opportunity to worship the deities here. The Clean and quiet atmosphere of the temple, the beautiful decorations of the deities, and the historical background of the temple, give an inspiration to the worshippers. We feel we are in communion with or nearer to the Almighty. The management is keeping the temple good.

(Sd.) S. Chellapandian,
Speaker,
Madras Legislative Assembly.

8—6—63

I am extremely happy when I had the occassion to have the Dharshan of Sri Muthukumaraswamy, and Sri Thaiyalnayagi. The temple is kept very clean and tidy. Thanks to the administrators for receiving us very warmly and given us the opportunity to have the Dharshan of Swami and Shri Ambal

(Sd.) K. Kamalakannan M.L.C.,
(Ex. Mayor, Madras)
7—6—63.

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானும் பிகாசமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் திருவிழா வின்போது 3—6—63 முதல் நிகழும் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாட்டின் நிகழ்ச்சிகள்.

முதல் திருநாள் :

3—6—63 திங்கட்கிழமை வேத உபநிஷதத் திருநாள் சென்னை, தர்மரக்ஷாமணி பிர்ம்மஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் B. A., B. L., M. L. C., அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை யின் போது :-

"வேதம் வடமொழி என்று எண்ணவேண்டாம், அப்பர் அவ்வாறு கருதவில்லை." வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும்' என்ற அப்பர் வாக்கால் வடமொழி, தென்மொழி இரண்டிற்கும் வேதம் பொது என்பதை அறியலாம். இறையருளால் சிலபெரியோர்களது உள்ளத்துத் தோன்றிய உள்ளொளியே வேதக் கருத்துக்கள். அவை அருள் வாக்குகள் என்பதால்தான் அவற்றை நாம் மதிக்கிறோம். வேதக் கருத்து உள்ளத்தில் தோன்றியவர்களே ரிஷிகள் ஆவர். வித் என்பதி லிருந்து வித்தை என்ற சொல்லும் வேதம் என்ற சொல்லும் தோன்றின. இந்த 'வித்' என்ற சொல் எல்லா மொழிகளிலும் இருக்கின்றது. நமது அறிவு ஒப்புக்கொள்ளும் எல்லா விஷயங் களையும் உடையதே வேதம்" என்று விளக்கினார்கள்.

சென்னை திரு, அ. ச. ஞானசம்பந்தம் M. A., அவர்கள் "திருமுறைகள்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில் :-

"ஆண்டவனின் அருள் வன்மையைப் படிப்படியாகக் கூறுவது திருமுறை. இறைவன பால் நினைந்தூட்டும் தாயைப்போன்று அருளுபவன். எனவேதான் இறைவனைத் தாய் என்றும் தந்தை என்றும் கருணைக்கடல் என்றும் பலவாறு புகழ்கின்றனர். இறைவன் அருளால் உள்ளத்திலே உண்மை ஒளி தோன்றிய வர்கள், இறைவனைப்பற்றி எண்ணி எண்ணி பல அனுபவங்களை அடைகின்றனர், அவ்வனுபவத்தைப் பெற்றவர்கள் தம் அனுப

வத்தைக் கூறசொல்லில் இடமில்லையே என்று ஏங்கி ஏங்கி அதை ஆயிரக்கணக்கான பாடல்களால் தருவதன் மூலம் திருப்தி அடைய முயன்றனர், அனுபவம் புதிது புதிதாகத் தோன்றவே பல்வேறு கருத்துக்களையுடைய பாடல்கள் பலப்பல புதிதுபுதிதாகத் தோன்றின. 'கண்டனன் கண்ணுக்கெதிரே இறைவனை' என்று கூறும் மாணிக்கவாசகப் பெருமானே "கேட்டறிவோம் உனைக் கண்டறிவாரை" என்று கூறுகிறார். அது முன்னுக்குப் பின் முரணானதல்ல: அனுபவம் மாறமாற உள்ளத்து உணர்ச்சி உந்த வந்த சொற்கள் இவை," என்று கூறினர்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர் பள்ளித் தலைமையாசிரியர். தருமையாதீனப்புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A.L.T. அவர்கள் 'உபநிஷதம்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவில் :-

"வடமொழியிலே வேதம், ஆகமம் முதலியன சிறந்து விளங்குகின்றன. இறைவனை எண்ணி எண்ணி அனுபவம் அடைந்தவர்கள் அதனை அடைய உதவிய ஒழுங்கு முறைகள், அதனால் விளைந்த எண்ணம், அனுபவம் இவற்றைத் தொகுத்துரைத்தனர். அத்தொகுப்புக்களே வேத உபநிடதங்கள், வேதத்தில் இறைவனை வழிபடற்குரிய முறைகளைப் 'பிராம் மணங்கள்' என்ற பகுதியிலும், மந்திரங்களை 'மந்திரபாக'த்திலும் கூறினர். மந்திர பாகத்தில் அடிநிலையாகத் 'தத்துவ பாகம்' இருக்கிறது, மந்திர பாகத்தில் உள்ள கருத்துக்களை மகரிஷிகள், அன்பாக அழுத்தமாகச் சத்திலே இருப்பவர்களை அருகில் வைத்துக் கூறியதே உபநிஷதமாகும். உபநிடதங்கள் மொத்தம் 108. அவற்றில் சிறப்புடையவை 32. அதிலும் 12. இப்பன்னிரண்டிலும் ஈசாவாஸ்ய உபநிஷதம்' போன்றவை முதன்மையாக உள்ளன" என்று விளக்கமாகக் கூறினர்கள்.

வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தேவாரம் வேதசாரம் என்ற தலைப்பில் ஆற்றிய பேருரையில் :-

"வேதம், ஆகமம் இவற்றையும் தேவாரக் கருத்துக்களையும் ஒப்பு நோக்கின் தேவாரம் வேதத்தின் சாரத்தையே கூறுகிறது என்பதை எளிதில் உணரலாம். சொரூப லக்ஷணம், தடஸ்த லக்ஷணம், சரியை. கிரியை, யோகம் முதலியவற்றை வேதம் கூறுவது போலவே மூவர் தேவாரமும் இவற்றைக் கூறுகின்றது.

வேதத்தைப் பசு எனக் கொண்டால் ஆகமத்தைப் பாலாகவும், தேவாரத்தை நெய்யாகவும் கொள்ளலாம், எனவே தேவாரம் வேதசாரம் என்பதில் ஐயமில்லை.'' என்று கூறினார்கள்.

சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ. அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் வேதங்கள் எனனும் பொருள்பற்றிய பக்திபிரவசனத்தின் போது :-

"தெய்வம் என்பது உண்டு" என்று முதலில் கூறிய ஒரே மதம் இந்து மதம். மதம் என்ருல் தீயகாரியம் எதையும் செய்யச் சொல்லாது. எந்த மதமும் நற்காரியங்களையே செய்யச் சொல்லும். தன் மதத்தையே விட்டுப் பிற மதம் மாறியவனை வேதம் 'தன் தெய்வமும் அவனைத் தள்ளிவிடும். இவன் கைப் பிடிக்கப் போன தெய்வமும் விட்டுவிடும். அவன் அங்குமில்லா மல் இங்குமில்லாமல் பாவியாவான்' என்று மதம்பற்றிக்கூறு கிறது. பெண் உருவாகத் தெய்வத்தைக் கண்ட ஒரே மதம் வைதிக மதம். வேதம் அளவற்றது. நானூறு ஆண்டுகள் வேதாத்தியானம் செய்தும் பாரத்வாசர் சிறிதுதான் வேதத்தை அறிந்தார் என்ருல் அதன் அளவை என்னென்பது என்று வேதம், இந்து மதம் இவற்றின் பெருமையை விளக்கிக் கூறினர்கள்.

## இரண்டாம் திருநாள்:

4—6—63 செவ்வாய்க்கிழமை சிவாகமத் திருநாள். பாண்டிச் சேரி இன்ஸ்ட்யூட் ஆப் இண்டாலஜி திரு. என். ஆர். பட் அவர்கள் "சிவாகமப் பொருட்சிறப்பு" என்னும் பொருள்பற்றி பேசினர்கள். இது ஞானசம்பந்தத்தில் பின்னர் கட்டுரையாக வெளிவரும்.

தருமையாதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரியர், சிவாகம வித்துவான். சிவஸ்ரீ. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் சிவாக மங்கள் என்னும் பொருள்பற்றிப் பேசியபோது:- நான்கு வேதங் கள், இருபத்தெட்டாகமங்கள் இவை தோன்றிய முறை, அவற் றின் பிரிவுகள், ஆகியவற்றை விளக்கினர்கள். ஆகமங்களில் சிவபேதம், ருத்திரபேதம், உபாகமங்கள், ஞானபாதம், யோக பாதம். சரியாபாதம். கிரியாபாதம், பிராசாத மந்திரம், பஞ்சாட் சரம், அத்துவா மந்திரம், ஆலயம், அமைக்கும் முறை, ஏழுவித இலிங்கங்கள், ஆலயத்திற்குப் போகும் முறைகள், தீக்கை முறைகள் ஆகியவற்றைத் தெளிவாகப் பேசினர்கள்.

திருவையாறு, தருமையாதீனப்புலவர் வித்துவான், திரு, இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் சிவாகமங்களும், திருமுறைகளும் என்னும் பொருள்பற்றிப் பேசும்போது சிவாகமக் கருத்துக்கள் எவ்வாறு திருமுறைகளில் புதைந்து கிடக்கின்றன என்பதையும், சிவாகமச்சிறப்பு, திருமுறைச்சிறப்பு இவற்றையும் விளக்கினுர்கள்.

பின்னர் ரஞ்சிதகான, இசைமணி, மதுரை, திரு. S. சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது.

மூன்ரும் திருநாள்:

5—6—63 புதன்கிழமை இதிகாசத் திருநாள் மதுரை தினமணி பொறுப்பாசிரியர் திரு. V. சந்தானம் அவர்கள் தொடக்கவுரையாற்றுகையில்:- தருமையின் பெருமை, அடியார்களின் பெருமை, கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருள் தொண்டு, சிவபெருமானின் எளியனுந்தன்மை முதலியன பற்றி விரிவானதொரு உரை நிகழ்த்தினுர்கள். சமயப்பற்று, கடவுள்பற்று, தொண்டுமனப்பான்மை இவை மனிதனுக்குமிகவும் அவசியம் என்று வற்புறுத்தினுர்கள். மேலும் அவர்கள் மக்கள் புராண இதிகாசங்களின் தத்துவப் பொருளை உணரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

காஞ்சிபுரம் திரு. கா. இராஜாராமபிள்ளை அவர்கள் "வில்லி பாரதத் தத்துவம்" என்னும் பொருள்பற்றிச் சிறந்த முறையில் ஆராய்ச்சியுரை நிகழ்த்தினுர்கள். இராமாயணம் பாரதம் ஆகிய இரண்டையும் இணைத்துப் பேசி அவற்றிலிருந்து நாம் உணரும் உயர்ந்த பண்புகள் இவை இவை என்றுகூறி இறைவன் திருவருளை முழுதும் வேண்டி, அவனுக்கே தொண்டனுக இருந்து, அறநெறியினின்று வழுவாமல் இருக்கவேண்டும் என்பதுதான் நாம் அறியும் பாரதத் தத்துவம் என்ருர்கள்.

தருமையாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, சங்கீத சாகித்ய வல்லப, கதாரசாஸ்வாதக, பாகவதர், எம்பார், ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினரால் "இராமாயணம்" சுருங்கிய காலத்தில் சிறந்த முறையில் கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தப் பெற்றது.

நான்காம் திருநாள் :

6—6—63 வியாழக்கிழமை புராணத் திருநாள் சென்னை திரு. K. கமலக்கண்ணன் M.L.C. அவர்கள் தொடக்கவுரையாற்றும்போது பிற மதத்தினர் மதத்திற்காக அதிகமாக உழைக்

கிருர்கள். அதுபோலவே நாமும் நமது சமயமும் சமயக் கொள்கைகளும் வெளிநாடுகளில் பரவ ஆவன செய்யவேண்டும் என்றும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தலைநகரிலும் பிற இடங்களிலும் சமயப் பிரசாரத்திற்காக - சைவ சமயத்திற்காக செய்பவை மிக்க பயனுடையனவாக உள்ளன என்று கூறினுர்கள்.

சுக்ப்பிரம்மம் பிர்மஸ்ரீ இராமசாமி சாஸ்திரிகள் அவர்கள் "பதினெண் புராணங்களில் சிவபுராணம்" என்னும் பொருள் பற்றிப் பேசினுர்கள். பதினெண் புராணங்கள் இவை இவை என்றும், அவற்றில் சிவபுராணங்கள் பத்து என்றும் கூறி பத்து சிவபுராணங்களைப்பற்றிய விரிவுரை நிகழ்த்தினுர்கள். சம்ஸ்கிருத ஸ்லோகங்கள், திருமுறைகள் ஆகிய மேற்கோளோடு அழகாகப் பேசினுர்கள்.

காஞ்சிபுரம் திரு. கா. இராஜாராமபிள்ளை அவர்கள் "கந்த புராணத் தத்துவம்" என்னும் பொருள்பற்றி விரிவுரை யாற்றுகையில் பசுவாகிய உயிரை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் பதியை அறியமுடியாமல் தடுக்கிறது. மும்மலங்களை ஒழித்து பசுஞானம், பாசஞானம் நீக்கப்பெற்று பதிஞானம் கைவரப்படும் நிலையை உணர்த்துவது கந்தபுராணம் என்ருர்கள்.

பின்னர் திருச்சி வானொலிநிலையம் திரு. K. C. தியாகராசன் அவர்கள் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது.

ஐந்தாம் திருநாள் :

7—6—63 வெள்ளிக்கிழமை சங்க இலக்கியத் திருநாள் டாக்டர். திரு. B. நடராசன் M.A., M.L.A. அவர்கள் தொடக்கவுரை யாற்றுகையில், முற்காலத்தில் முச்சங்கங்கள் தமிழை வளர்த்தன. முதற் சங்கத்தில் 4449 புலவர்களும், இடைச் சங்கத்தில் 449 புலவர்களும், கடைச் சங்கத்தில் 49 புலவர்களும் வாழ்ந்ததாகக் கூறுகின்றனர். பல்வேறு குலத்தவரும் புலவராக இருந்தனர். திறமிக்க இலக்கணமுடைய இலக்கியங்களே அனைவராலும் விரும்பப்பட்டன. பொருள் வளத்தாலும், நயத்தாலும் பெருமை மிக உடையதாலேயே இக்காலத்தும் அவை பாராட்டப் படுகின்றன. எந்நாட்டிலும் கலைஞர்கட்குச் சுதந்திரம் இருந் தால்தான் அவர்கள் பாடல்கள் சிறந்து விளங்கும் என்பதை சங்க இலக்கியங்களால் நாம் அறியலாம். வேத காலத்தில் ஆரியர் எவ்வாறு வாழ்ந்தனரோ அவ்வாறே சங்க காலத்தில் தமிழர் வாழ்ந்தனர் எனக்கொள்ளலாம். சங்க இலக்கியத்தில் மிக விரிவாகக்கூறப்படும் பொருள் 2. ஒன்று காதல். மற்ருென்று

போர். சொல், பொருள், உவமை, அணி முதலியவற்றில் மிக்க நயம் உடையதாகவும், 2000 ஆண்டுகட்கு முன் தோன்றி மிகத் தொன்மையாக விளங்குவதாகவும், எளிய வாழ்வில் பெருமை கூறும் இலக்கியங்களாகவும் இருப்பது சங்க இலக்கியங்கள். என்று கூறினர்கள்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், திரு. தெ. பொ மீனுட்சிசுந்தரனர் M. A. B. L. M. O. L. அவர்கள் சங்க இலக்கியத்தில் சைவம் என்ற பொருள்பற்றி விரிவுரை யாற்றுகையில், சங்க காலத்தில் தமிழர் நிலத்தைக் குறிஞ்சி முதலிய ஐம்பிரிவுகளாகப் பிரித்துப் புணர்தல் முதலிய ஒழுக்கங் களை அமைத்தனர். காதல் அல்லது போர் இவற்றில் தமிழர் ஈடுபட்டமையால் அக்காலத்தெழுந்த பாடல்களும், காதல், வீரம் இவைபற்றியே எழுந்தன. பாடல்களின் பொருள், அளவு தொகை குறித்துப் பெயர்கள் இடப்பட்டன. அவர்கள் வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என்று இருபிரிவு உடையதாகவே இருந்தது. இவ்விரண்டில் எது உலக அடிப்படை என்று அக்காலப் புலவர் ஆராய்ந்து அன்பே உலக அடிப்படை என அறிந்தனர். இவ்வன்பை அவர்கள் காதல் வாழ்விலே மட்டும் கண்டு மகிழ்ந்தனர். பின் சமயத்தின் அடிப்படையும் அன்பு எனக்கொண்டனர். அன்பே சிவம் என்பதை யாரும் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருப்பார் இறைவன். அகப் பாடல்கள் அன்பை விளக்குவதாலேயே ஆழ்வார்கள், நாயன் மார்கள் இறைவன்பால் அன்புமேலிட்டு அகத்துறை வழியாக வும் பாடல்கள் பாடினர். அன்பையே தியாகமாகவும் கூறுவர். மக்களும் பிற உயிரினங்களும் வாழத் தான் சாவை ஏற்குமாறு விடம் உண்டான் இறைவன். எனவே, சைவ சமயத்தவர் தியாகத்தை மேலாகக்கொண்டனர் என்பது புலனுகிறது என்று கூறினர்கள்.

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியை திருமதி. ப. நீலா அவர்கள் ''பத்துப்பாட்டு'' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுகையில் :-

சங்க இலக்கியங்களை இரு பெரிய பிரிவாகப் பிரித்து அவை களுக்குப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற பெயர்களைக் கொடுத்துள்ளனர் புலவோர்.

பத்துப்பாட்டில் 'முருகாற்றுப் படை' தொடங்கி 'மலைபடு கடாம்' முடிய பத்து நூல்கள் அடங்கியுள்ளன. வள்ளல்பால்

சென்று செல்வத்தைப் பெற்றவன் மற்றையோரிடம் வந்து தான் பெற்ற இன்பத்தைக் கூறி ஆற்றுப்படுத்துவான். இப்படி ஆற்றுப்படுத்தும் நூல்கள் ஆறு அமைந்துள்ளன.

திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானின் பேரருள் தன்மை திருவுருவப் பெருமை இவைகளுடன் எளிவந்து ஆண்டு கொள்ளும் கருணைத் திறமும் அழகாகக் கூறப் பட்டுள்ளது.

பொருநராற்றுப் படையிலும், பட்டினப்பாலையிலுமாக கரிகால் வளவனின் வீரம், கொடை, புலமை - சோழநாட்டின் வளம் இவைகள் பேசப்படுகின்றன. 'காலின் ஏழடி பின் சென்று - புலவர்களை வழியனுப்பும் கரிகாலன் மூலம் ஏழிசைக் கும் வழிபாடு செய்பவன் அவன் என்பதனை நாம் உணரு கிறோம். பாண்டி நாட்டைப் பார்க்கிறோம். ஆறு கிடந்தன்ன அகல்நெடும் தெருக்களை அறிந்துகொள்கிறோம்.

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் 'மதுரைக் காஞ்சி' மூலமும் 'நெடுநல்வாடை' மூலமும் நம் நெஞ்சிலே பதிகின்றான். 'நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளானாய்ப் படைவீரர்களுக்கு ஊக்கமூட்டும் தன் மையை நெடுநல் வாடையில் காண்கிறோம்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇ
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

என்ற தொல்காப்பிய இலக்கணப்படி ஆற்றுப்படை நூல்கள் அமைந்துள்ளன.

திருப்பனந்தாள் வீணை ஆசிரியர் திரு. R. சண்முகசுந்தரம் குழுவினரின் வீணை இன்னிசை நிகழ்ந்தது.

ஆறும் திருநாள் :

8—6—63 சனிக்கிழமை சமயவரலாற்றுத் திருநாள். சென்னை சட்டசபை சபாநாயகர் திரு. S. செல்லபாண்டியன் B. A., B. L., அவர்கள் பேசிய தொடக்கவுரையின் சுருக்கம் :-

கடவுள் ஒருவர் இல்லை என்று கூறுபவர்கள், எல்லோரும் உண்மையில் உள்ளத்தில் பிறரறியாவண்ணம் ஒப்புக்கொள்

கின்றனர். காரணம் நம் காட்சிக்கு எளிதான இந்த அண்ட கோளங்கள், சூரிய சந்திரன் முதலியன ஒரு ஒழுங்குபட்ட முறையில் இயங்கி வருகின்றன. ஒன்றொடொன்று மோதிக் கொள்வதில்லை. இவ்வாறான ஒழுங்குபட்ட இயக்கத்திற்கு இயக்குவோன் இருந்தாகவேண்டும் என்று உணர்கிறார்கள்.

மனிதன் தன்னலமற்று, தியாக மனப்பான்மையோடு, வீரனாகத் திகழவேண்டும். வீரம் இல்லையேல் உண்மை பக்தி இராது. மக்களுக்காக நாம் வாழவேண்டும். இந்து மத சமுதாயத்தை மேல்நிலை அடையச் செய்ய ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும், என்று பேசினார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர், சைவ இலக்கியப் பேரறிஞர், வித்துவான்; டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A., Ph. D. அவர்கள் "சங்ககாலச் சைவம்" என்னும் பொருள் பற்றிப் பேசியதின் சுருக்கம். இன்று நமது இந்து சமய இளைஞர்கள் பெரும்பாலும் சமய அறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பெரியோர்களின் அறியாமையே. பெரியவர்கள் முதலில் சமய வரலாறு, ஆகியவற்றைத் தெரிந்திருந்தால் இளைஞர் உலகத்தை தட்டித் எழுப்ப முடியும்.

சைவ சமயத்தின் தொன்மையை உலக வரலாற்றுச் சான்றுகள், நம் நாட்டு வரலாறு, புதைபொருள் ஆராய்ச்சி ஆகிய சான்றுகளுடன் விளக்கினார்கள். உலகெங்கும் சிவலிங்கங்கள் காணப்படுவதால் ஒருகாலத்தில் சைவ சமயம் உலக முழுவதும் பரவி இருந்தது எனலாம். தமிழ் நாட்டில் சக்திக்குரிய இடங்களாகப் பதின்மூன்று இடங்களைக் கூறுவதுபோல எகிப்து நாட்டிலும் இதுபோன்ற ஒரு கொள்கை உண்டு. கிரீஸ், மால்டா, இராக் முதலிய இடங்களில் கொடிக்கம்பம், நந்தி, இலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவைகளெல்லாம் நம் பழமைக்குச் சான்றுகளாகும்.

சென்னை திரு. T. புருஷோத்தமன் அவர்கள் "வரலாற்றில் சமயப் பாதுகாப்பு" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் இன்று அரசியல் உலகம் செழிக்க நாம் பல செயற்குழுக்கள், திட்டங்கள் வகுத்துப் பணியாற்றுவதுபோல் சமயப் பாதுகாப்புக்காக ஒரு பொதுக்குழு அமைத்தல் வேண்டும். எல்லா மக்களுக்கும் வேறுபாடின்றி சமய அறிவு புகட்ட வேண்டும். தற்போது திருமடங்கள் இத்தகைய பணிகளை நடத்தி வருகின்றன. எனினும், பொதுமக்களும் இதில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். தருமையாதீனத் திருப்பணி தொண்டு சில

வற்றை மிகவும் பாராட்டி, நமது குருமகாசந்நிதானம் அவர்களின் திருக்கோயில்கள் பராமரிப்பு முதலியவற்றை வியந்து பாராட்டிப் பேசினர்கள்.

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியை திருமதி. ப. நீலா அவர்கள் சமய வரலாற்றில் "பெண்கள் பங்கு" என்ற தலைப்பில் விரிவுரையாற்றுகையில்:-

இறைவன் திருமேனியில் பாதியிடத்தினைப் பெற்றுக்கொண்டாள் உமை. நீலமேனி வாலிழை பாகனுக அவன் காட்சி தருகிருன். இறைவன் கொடுகொட்டி, பாண்டரங்கம், காபால நடனங்களை ஆடும்போது சக்தி, சீர், தூக்கு, பாணி என்ற தாளமிடுகிருள்.

மணிமேகலைக் காப்பியத்தில் புத்தசமயம் வளர மணிமேகலை செய்த தொண்டு அளவிடமுடியாது. சமயப்பணி செய்யும் வண்ணம் பெண்களிடம் இயல்பாக அமைந்த பொறுமை, தன்னடக்கம் போன்ற குணங்கள் துணைசெய்கின்றன. கணவன் வழியிலேயே நின்று சமயம் வளர வழிசெய்தாள் சமய காப்பிய கால பாண்டிமா தேவி!

'மைவைத்த கண்டன் நெறியன்றி மற்ருேர் நெறி கருதா தெய்வக்குடிச் சோழர்கள் ஆண்ட சோணுட்டிலும் சமயம் வளரப் பெண்கள் பணிசெய்தார்கள்.

தம்பியாருக்காக வாழ்ந்து சைவத்தை நிலைநாட்டிய திலகவதியார் - தவம் பெருக்கிய சுந்தரரின் துணைவி சங்கிலியார், காரைக்காலின் மேய குலதனமாம் காரைக்காலம்மையார் ஆகியோரின் பணிகளும் சமய வளர்ச்சியில் உண்டு.

சோழப் பேரரசன் இராஜராஜனுக்கு சமய வாழ்வில் நாட்டத்தைக் கூட்டி பெருவுடையார் கோயிலைத் தோற்றுவித்த பெருமை 'குந்தவை' யாருக்கு உண்டு. நாயன்மார்களின் வாழ்வில் மணியுறுநூல் போல் நின்று பணிசெய்த பெண்கள் அநேகம்.

ஆகவே சமய வளர்ச்சியில் பெண்கள் பங்கு 'பாதி' என்று சொல்லும் அளவில் சமயத்தை வளர்த்தனர்.

மதுரை திரு. மாரியப்ப சுவாமிகள் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் வழங்கிய பொன்னுடையை சென்னை சட்டசபை சபாநாயகர் கனம், திரு. எஸ். செல்லபாண்டியன் பி. ஏ., பி. எல்., அவர்கள் திரு. மாரியப்பசுவாமிகளுக்குப் போர்த்தினர்கள்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில்

## ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சோபகிருது ஆண்டு வைகாசித்திங்கள் 20-ஆம் நாள் (3—6—63) திங்கட்கிழமை தொடங்கி மகோற்சவம் மிக்க சிறப்புடன் நடைபெறுகிறது. 3—6—63 அன்று துவஜாரோகணமும் 9—6—63 திருக்கல்யாண வைபவமும் நடைபெற்றன. 11—6—63 திருத்தேர்த் திருவிழா, 12—6—63 தீர்த்தங்கொடுத்தருளலும் துவஜாவரோகணமும் நடைபெறும். திருவிழா நாட்களில் சிறந்த நாதஸ்வர இன்னிசைகளும் வேத சிவாகம பாராயணமும், பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணமும் சிறந்தமுறையில் நடைபெறுகின்றன.

திருக்கோயிலுக்கெதிரில் திருவிழாப்பந்தல் தோரணங்கள் மின்விளக்குகள் முதலியவற்றுடன் அழகு செய்கிறது.

12—6—63 அன்று குருபூஜை விழாவும் 13—6—63 அன்று இரவு 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிவிகையில் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளலும் நடைபெறும். இவ்விரு நாட்களிலும் நண்பகலில் தருமையாதீனம் ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

தருமையாதீனம் ஞானபுரீசுவரர் மகோற்சவத்தை முன்னிட்டு 3—6—63 திங்கட்கிழமை முதல் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணி முதல் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு மிக்க சிறப்புடன் நடைபெறுகிறது.

அறிஞர்கள் பலர் பங்குபற்றிச் சொற்பொழிவாற்றுகின்றனர் சொற்பொழிவுகளுக்குப் பின்னர் சிறந்த இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. (மாநாட்டின் நிகழ்ச்சி விளக்கம் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

24-ஆவது மகாசந்நிதானம்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா.

சோபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 17 ஆம் நாள் (31—5—63) வெள்ளிக்கிழமை தருமையாதீனம் 24-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. காலை-மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ ல-ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். மாலை வழிபாட்டிற்கு இருபத்துநான்கு தட்டுக்களில் பழம் முதலிய நிவேதனப் பொருள்கள்வைத்து வீதிவலமாக நாதஸ்வர இன்னிசையுடன் எடுத்துச் செல்லப்பட்டன. பெருமக்கள் பலர் வந்து வழிபட்டு உய்ந்தனர். காலை மாலை இருவேளைகளிலும் நிவேதனங்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டன,

குருபூஜை விழாவைக் குறித்து குருமூர்த்த ஆலயத்தில் பெரிய புராணச் சொற்பொழிவுகள் காலை-மாலை இரு வேளைகளிலும் நடைபெற்றன. பதின்மூன்று சருக்கங்களைப் பற்றியும் ஆதீனத் திருக்கூட்டத்தடியவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், ஆதீன ஓதுவாமூர்த்திகள், வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு வழிபாட்டிற்குப் பின்னர் பாபநாசம் விஜயலக்ஷ்மி குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது.

வேளூர்:

## வஸந்தோற்சவம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 27—5—63 முதல்தொடங்கி 5—6—63 முடிய உள்ள நாட்களில் வஸந்தோற்சவம் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது விழா நாட்களில் இன்னிசை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன,

27—5—63 திங்கட்கிழமை கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் கல்வெட்டாராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "ஆளுடைய பிள்ளை" என்ற தலைப்பிலும். வித்துவான், சிரோமணி திரு. வி. சபேசன் (தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி) "ஆளுடைய அரசு" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

28—5—63 செவ்வாய்க்கிழமை ரஞ்சிதகான மதுரை. திரு. சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது. 29—5—63 புதன்கிழமை மாயூரம், திருமதி. M.S. நாகலட்சுமி குழுவினரின் இன்னிசையும், 30—5—63 வியாழக்கிழமை சென்னை, திரு. P. S. தியாகராஜன் குழுவினரின் இன்னிசையும். 31—5 63 வெள்ளிக்கிழமை மாயூரம், திரு. S. கணேசன் குழுவினரின் இன்னிசையும் நிகழ்ந்தன.

1—6—63 சனிக்கிழமை தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "ஆளுடைய நம்பி" என்ற பொருளில் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் திருப்பனந்தாள், திரு. R. சண்முகசுந்தரம் குழுவினரின் வீணை இன்னிசையும், 2—6—63 ஞாயிற்றுக்கிழமை திருமருகல், திரு. V. சோமசுந்தரம் குழுவினரின் இனனிசையும் நிகழ்ந்தன.

3—6—63 திங்கட்கிழமை தஞ்சை, திருமதி, T. R. கமலாமூர்த்தி குழுவினரால் "காரைக்காலம்மையார்" என்ற கதாகாலக்ஷேபமும். 4—6—63 செவ்வாய்க்கிழமை தருமையாதீன வித்துவான் கீர்த்தனகுலசேகர சங்கீதசாகித்ய வல்லப. கதாரசாஸ்வாதக, பாகவதர், எம்பார் ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினரால் "கண்ணப்பர்" என்ற கதாகாலக்ஷேபமும் நிகழ்த்தப்பெற்றன.

5—6—63 புதன்கிழமை கும்பகோணம், திரு. N. இராஜலட்சுமி குழுவினரின் இன்னிசை நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

சீகாழியில் :

## ஸ்ரீ சட்டைநாதர் புறப்பாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 17-5-63 வெள்ளிக்கிழமை ஸ்ரீ சட்டைநாதசுவாமிக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. நண்பகலில் ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. இரவு முத்துச்சட்டைநாதர் புறப்பாடு மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. பின்னர் மலைக்கோயிலில் எழுந்தருளி அருள்வழங்குகின்ற ஸ்ரீ சட்டைநாதருக்குப் புழுகுகாப்பு சார்த்தி சிறப்பு வழிபாடு செய்யப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி பிரசாதங்கள் வைக்கப் பெற்ற துணிப்பைகளை வழங்கியருளினார்கள். மாயூரம் முதலிய ஊர்களிலிருந்தும் அன்பர்கள் பலர்வந்து வழிபட்டுய்ந்தனர்.

ஆச்சாள்புரத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் திருஞானசம்பந்தருக்கும்தோத்திரபூர்ணாம்பிகைக்கும் திருக்கல்யாணம் 8—6—63 சனிக்கிழமை இரவு சிறப்பாக நடைபெற்றது. பின்னர் முத்துவிமானத்தில் திருக்கல்யாணக் கோலத்துடன் திருவீதியுலா வருதலும், ஜோதியிற் கலத்தலாகிய ஜோதி தரிசனமும் நிகழ்ந்தன. அன்று தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தது. விழாவில் சிதம்பரம் பச்சையப்பன் உயர் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தேவார வகுப்பு மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி "சம்பந்தர் வரலாறு" பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

மாயூரம் குமரக்கட்டளேயில்:

## விடுதிக் கட்டிடத் திறப்புவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் குமரக்கட்டளே ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற விடுதிக் கட்டிடத் திறப்பு விழா 10—6—63 திங்கட்கிழமை காலே நிகழ்ந்தது. விழாவிற்கு சென்னே. சட்டசபை சபாநாயகர் கனம் திரு. S. செல்லபாண்டியன், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலேமை யேற்று தலேமையுரை நிகழ்த்தினுர்கள். சென்னே. இந்து சமய அறநிலேய ஆணேயர் உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல்.. அவர்கள் விடுதிக் கட்டிடத்தைத் திறந்துவைத்து திறப்புரையாற்றினுர்கள். கனம் திரு. சபாநாயகர் அவர்கட்கும், திரு. கமிஷ்ணர் அவர்கட்கும் தேவஸ்தானம் சார்பில் வாழ்த்துரைகள் வாசித்து அளிக்கப்பெற்றன. வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறிஞர்கள் பண்ணிசை வாணர்களின் திருமுறைப்பாராயணத்தொடு விழா தொடங்கியது. தேவஸ்தானச் சார்பில் கோயில் மரியாதைகள் செய்து தரிசனம் செய்து வைக்கப்பட்டது.

சென்னே, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலேய வழிபாட்டுக்குழுவினரின்

## தென்பாண்டிநாட்டுத்தலங்களில் சமயப்பிரசார வழிபாடு

சென்னேத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலேய வழிபாட்டுக் குழுவினர் நூறு பேர் இரண்டு பஸ்களின் மூலம் 19—5—63 முதல் 26—5—63 முடிய தென்பாண்டிநாட்டுத் தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் சிறப்பாக நிகழ்த்தினர். யாத்திரைத் தொடக்கத்தில் நிலேயத்தில் சென்னே அறநிலேயத் துறைஆணேயர் திரு. M. S. சாரங்கபாணி முதலியாரவர்கள் வாழ்த்துரை கூறி வழியனுப்பினுர்கள். திரு. நல். முருகேச முதலியார். அறநிலேய உதவி ஆணேயர், திரு S. இராமச்சந்திர ஐயர், திரு. ஐயா. சுப்பிரமணிய முதலியார் ஆகியோரும் வழியனுப்பி வாழ்த்துக் கூறினர்.

குழுவினர் வழிபாடு நிகழ்த்தி கோளறு திருப்பதிக பாராயணத்துடன் யாத்திரையைத் தொடங்கினர். 19—5—63ல் திருவானைக்கா, மதுரை, ஆகிய தலங்களிலும், 20—5—63ல் திருச்சுழியல், தூத்துக்குடி, திருமந்திர நகர், திருச்செந்தூர் ஆகிய தலங்களிலும் 21—5—63ல் ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வைகுண்டம் பெருமாள்கோயில், ஸ்ரீ கைலாசநாதர்கோயில், ஸ்ரீ குமரகுருபரர் கோயில், திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர்கோயில், குறுக்குத் துறை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகோயில், ஆகியவற்றிலும், 22—5—63ல் பாளையங்கோட்டை ஸ்ரீ திரிபுராந்தகர்கோயில், நாகர்கோயில், சுசீந்திரம், கன்னியாகுமரி. ஆகிய தலங்களிலும், 23—5—63ல் வேள்விமலை ஸ்ரீ முருகன்கோயில், திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாதர்கோயில், ஸ்ரீ வர்க்கலைபெருமாள்கோயில் ஆகிய வற்றிலும், 24—5—63ல் திருக்குற்றாலம், இலஞ்சி முருகன் கோயில், திருமலை முருகன் கோயில், தென்காசிக்கோயில் சிவ சைலம், விக்கிரமசிங்கபுரம் ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் கோயில், பழைய பாபநாசம் அகத்தியாகோயில், பாபவிநாசர் கோயில் ஆகியவற்றிலும், 25—5—63ல் விக்கிரமசிங்கபுரம் சிவன்கோயில், அம்பாசமுத்திரம் அகஸ்தியர்கோயில், சிவன் கோயில், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் கோயில், தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் அவதாரமனை, மடவார் விளாகம் சிவன் கோயில் ஆகியவற்றிலும், 26—5—63ல் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் கோயில், திருப்பரங்குன்றம், திண்டுக்கல் ஸ்ரீ அபிராமி அம்மன்கோயில், சமயபுரம் மாரியம்மன்கோயில், திருவாமூர் அப்பர் சுவாமிகளின் அவதாரமனை ஸ்ரீ பசுபதீசுவரர் கோயில் ஆகியவற்றிலும் வழிபாடும் சமயப் பிரசாரமும் சிறப் பாக நடைபெற்றன. ஆங்காங்கும் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சிதம்பரம் திரு. என். தண்டபாணி பிள்ளை, திருமதி ஆர். இராஜரத்தினம் அம்மையார், முதலி யோர் சமய விரிவுரை நிகழ்த்திச் சிறப்பித்தார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன் அவ்வத் தலத் தேவாரத் திருப்பதிகங்களையும் பக்திப்பாடல்களையும் இசையுடன் ஓதி இறைவழிபாட்டையும், பிரசாரத்தையும் சிறப் பித்தார்.

அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் மேற்கண்ட தலங்கட்குத் தமது அலுவல கத்தின் வாயிலாகச் சுற்றறிக்கை அனுப்பி உதவி புரிந்ததும், திருச்சியில் தருமையாதீனத்தின் மௌன மடமும், மதுரையில்

திரு. ம. க. சுந்தரேச பட்டரும், திரு. இராஜாராம் அவர்களும், மதுரை ஆதீனமும், தூத்துக்குடியில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையினரும், திருச்செந்தூரில் ஐயா சுப்பிரமணிய முதலியார் அவர்களும், ஸ்ரீ வைகுண்டத்தில் திரு. டி. எம். குமர குருபரன் பிள்ளை அவர்களும், திருநெல்வேலியில் தருமை யாதீனமும், திரு. எஸ். எஸ். அருணாசலம் பிள்ளை அவர் களும், சுசீந்திரத்தில் டாக்டர், திரு. பா. நடராசன் அவர்களும் திருக்குற்றாலம், இலஞ்சியில் திரு. ஐ. ஏ. சிதம்பரம்பிள்ளை, M. L. C. அவர்களும், சிவசைலத்தில் தருமையாதீனமும், பாபநா சத்தில் திரு. பிச்சைராவுத்தரும், ஸ்ரீவில்லிபுத்தூரில் திரு. பாலையா பிள்ளை, திரு. இராஜகோபால்பிள்ளை, திரு. இராமசாமி முதலியார் முதலியவர்களும் மற்றும் பொதுமக்களும், குழு வினரை வரவேற்று வழிபாட்டையும், பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திக் கொடுத்தும் மாகேஸ்வரபூஜை, சிற்றுண்டி அளித்தல் முதலிய உபசாரங்கள் புரிந்தும் சிறப்பித்தனர். அவர்கள் அனை வருக்கும் திருவாரூரில் நடைபெற்ற யாத்திரை நிறைவுக் கூட்டத் தில் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றிதெரிவித் தார்கள்.

## வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா.

சென்னை சமயப்பிரசார நிலைய அன்பர்களும், வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் பெறும் உறுப்பினர்களுமான தொண்டர் கள் சார்பில் 23—5—63 அன்று வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக் கும் அபிஷேகம் அர்ச்சனை செய்த சந்தனக்குழம்பும் அருட் பிரசாதங்களும், 27—5—63 மாலை 7-மணிக்கு நிலையத்தில் மாம் பாக்கம்குருகுலத்தலைவர், சிவத்திரு அழகர் அடிகள் (இளவழகனர்) அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. திரு. P. சுவாமிநாதன் வேளூர்த் தேவாரம், திருப்புகழ் பிள்ளைத் தமிழ் முதலிய அருட்பாடல்களை இசையுடன் ஓதிப் பிரார்த்தனை நிகழ்த்தினர். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியும் கூறினர்கள். அன்பர்களும் உறுப் பினர்களும் அருட்பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

தென்பாண்டிநாட்டுத் தல விபூதி, குங்குமப் பிரசாதமும் அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

# அப்பர் அவதாரத்தலத்தில் கும்பாபிஷேகம்

தமிழக வரலாற்றில் கி. பி. ஏழாம் நூற்ருண்டின் தொடக்க காலம் இருண்ட காலமாக இருந்தது. சமண இருள் பரவி சைவ ஒளி மங்கியிருந்த காலம். இக்காலத்தில்தான் சைவத்தின் இருகண்களெனப் போற்றம்பெறும் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரெனும் அப்பர் பெருமானும் தமிழகத்தில் தோன்றி மக்கள் உள்ளத்தில் மண்டிக்கிடந்த இருளை அகற்றி சைவ ஒளியைப் பரவச்செய்தார்கள்.

இவ்விரு பெருமக்களுள் திருஞானசம்பந்தர் தமிழகத்தின் தென் எல்லையாகிய பாண்டிநாட்டில் தமிழ்ப் பண்பையும், சைவ நெறியையும் பாதுகாத்து வளர்த்தார். தமிழகத்தின் வடஎல்லையில் பல்லவர் ஆட்சி வளமுற்ற காலம், மகேந்திரவர்ம பல்லவன் சமணனுக மாறி ஆட்சியும் சமண நெறியைப் பின்பற்றிய காலம். அந்நிலையில் தென்னுற்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு அருகில் ஐந்துகல் தொலைவில் உள்ள திருவாமூரில், சைவ வேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில் புகழனுக்கும், மாதினியிருக்கும் அருந்தவ மகனுய் தோன்றினுர் மருள்நீக்கியார் என்ற பிள்ளை திருநாமங்கொண்ட திருநாவுக்கரசர். பெற்ருேரால் இடப்பெற்ற பெயர் மருள்நீக்கியார். பெருமானுல் கொடுக்கப்பெற்ற பெயர் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரால் அழைக்கப்பெற்ற பெயர் அப்பர்.

அக்காலத்திருந்துத் சமண சமயப் பிரசார பலத்தால் மருள்நீக்கியார் சமணசமயம் சார்ந்து இறையருளாலும், தமக்கை திலகவதியார் தவத்தாலும் சிவநெறியை கைபற்றினுர். சமணர்கள் இவரை, நீற்றறையிலிட்டும், யானையைக்கொண்டு இடறச் செய்தும், நஞ்சுகலந்த பால் சோற்றை உண்ணச்செய்தும் கல்லில் கட்டிக் கடலில் இட்டும் கொடுமைகள் பல செய்தனர். அரன் அருளால் ஐந்தெழுத்தோதி வெற்றிகண்ட நாவரசர் முடிமன்னனுகிய மகேந்திரவர்மப் பல்லவனையும் அவனது குடிமக்களையும் பழைய சைவ நெறிக்கு மாறச்செய்தார். இவர்கள் ஆற்றிய அருந்தொண்டால்தான் இந்நாட்டில் சைவம் புத்துணர்வோடு வளரத் தொடங்கியது. இன்று சைவமும், சைவர்களும் திருக்கோயில்களும், மடாலயங்களும் தமிழகத்தில் இருக்கின்றன என்ருல் அவற்றிற்குக் காரணம் ஞானசம்பந்தரும், நாவரசருமே யாம்.

இவ்விருவருள் ஞானசம்பந்தர் அவதாரத் தலமாகிய சீர்காழியில் ஸ்ரீ பிரமபுரீசர் கோயிலில் ஞானசம்பந்தருக்குத் தனிக்கோயில் இருக்கிறது. அப்பர் அவதாரத்தலத்தில் அவரது நினைவுக்கோயில் இல்லாதது வருந்தத்தக்கது. இதனைக் கருத்தில்கொண்ட சென்னை அறநிலைய ஆணையராயிருந்த திரு. அ. உத்தண்டராம பிள்ளை முதலில் அறநிலைய இலாகாவி லிருந்து ரூபாய் எண்ணாயிரம் கொடுத்து திருப்பணியைத் தொடங்கச் செய்தார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்தின் ஆதீனங்களும், திருக்கோயில்களும், பெருமக்களும், பொது மக்களும் நன்கொடை உதவி முப்பதாயிரம் வரை செலவு செய்து திருப்பணியை நிறைவேற்றியுள்ளார்கள். திருவாமூர் வாசிகளும், திருப்பணிக் கமிட்டியினரும் இடைவிடாத உழைப்பி னாலும், ஊக்கத்தினாலும், அப்பருக்குக் கருப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், விநாயகருக்கு ஒரு விமானம், புகழனார், மாதினியார், திலகவதியார் ஆகிய மூவருக்கும் ஒரு விமானம், திலவதியார் நூல்நிலையம், மடைப்பள்ளி இவற்றை யெல்லாம் உட்படுத்தித் திருமதில் முதலியவற்றைச் சிறப்பாக அமைத்துள்ளார்கள்.

இப்பொழுது முப்பதினாயிரம் செலவில் விரிவான முறையில் சிவாகம முறைப்படி மகாகும்பாபிஷேகம் செய்ய கும்பாபிஷேகக் கமிட்டியார் திட்டம் இட்டுள்ளனர்.

ஆனி மீ 19உ (3—7—63) புதன்கிழமை காலை 11 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. தருமை யாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் பதினாயிரம் ரூபாய் வரை கொடுக்கத் திருவுளம் கொண்டுள்ளார்கள். திருநெல்வேலி திரு. எஸ். எஸ். அருணாசலம் பிள்ளையவர்கள் ஐயாயிரம் வரை கொடுக்க முன்வந்துள்ளார்கள், திருச்செந்தூர்க் கோயில். திருப்புகலூர்க் கோயில், ஸ்ரீ வடபழநியாண்டவர் கோயில் முதலிய திருக்கோயில் அறங்காவலர்களும் உதவிசெய்ய முன் வந்துள்ளனர். சைவப் பெருமக்களும், பொது மக்களும், சைவ ஸ்தாபனங்களும் இயன்றவரை உதவி செய்து சைவ சமயாசாரிய ராகிய அப்பர்சுவாமிகள் கோயில் மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்திவைக்கவேண்டுகிறோம். கும்பாபிஷேகத்தை ஒட்டி ஜுலை, 1, 2, 3 தேதிகளில் திருமுறை மாநாடும், சிவபூசகர் மாநாடும், சிறப்பாக நடைபெற உள்ளன. மாநாட்டிலும், கும்பாபிஷேக நிகழ்ச்சியிலும், சிறந்த சிவாசாரியர்களும். அமைச்சர் கனம். பக்தவத்சலம், அமைச்சர், கனம். பூவராகவன்,

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம், ஸ்ரீ ல-ஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம் திருவாசக மணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், டாக்டர், திரு. பா. நடராசன் எம். எல். ஏ, திரு. கமலக்கண்ணன் எம். எல். சி. டாக்டர், மா. இராசமாணிக்கனர், திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் மற்றும் பலரும் கலந்துகொள்கின்றனர். சைவர்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பணிசெய்து சிறப்பெய்துவார்களாக.

பணமோ, பொருளோ அனுப்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி இரசீது பெற்றுக்கொள்ளலாம்.

பொருளாளர்,

**அப்பர்சுவாமிகள் கோயில் மகா கும்பாபிஷேகக் கமிட்டி,**

**திருவாமூர்,**

சேமக்கோட்டை, (P O.)

பண்ணுருட்டி (வழி) (தென்னார்க்காடு மாவட்டம்).



384 ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏழாந் திருநாள் :

9—6—63 ஞாயிற்றுக்கிழமை - பெருங்காப்பியத் திருநாள்

திருவண்ணுமலையாதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நாட்டில் எண்ணந்தான் செயலுக்கு முக்கியம். எண்ணம் தூய்மையாக இருக்கவேண்டும். நம் நாட்டில் தோன்றிய பெருங்காப்பியங்கள் மிகச் சிறப்புடையவை. அவை பல சமயச் சார்புடையவை. பல சமயச் சார்புடையவற்றைத் தொடங்கிவைக்க நான் பொருத்தமானவன். ஏனென்ருல் நான் பிறவழிச் சிந்தனையாளர்களோடு உறவு உடையவன் வான்முகில் வழாது பெய்க என்ற அரிய வாழ்த்து நம் சான்றோர் தந்தது. அதில் "குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்பது மிக்க சிறப் புடையது. இத்தகைய காப்பியங்களை நன்கு ஊன்றிப் பயின்று சிந்தனைத் தெளிவுபெறுதல்வேண்டும் என்று தொடக்கவுரையில் குறிப்பிட்டார்கள். அடுத்து கோவை நிர்மலா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்ச் செல்வி. திரு. சி ந. குழந்தை யம்மாள் M. L. A. மணிமேகலை சிலப்பதிகாரம்பற்றி அழகிய விரிவுரையாற்றினுர்கள்.

சிலப்பதிகாரம் சிறந்த காப்பியம். கோவலன் கண்ணகி, மாதவி ஆகிய சிறந்த பாத்திரங்களை அதிற் காண்கின்ருேம். மணிமேகலை அறம் வளர்த்த பெருமாட்டி. அட்சயபாத்திரத்தை ஏந்தி மக்களுடைய பட்டினியைப் போக்கினுள். மணிமேகலை "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற தத்து வத்தை விளக்குகின்றது. சாதுவன் வாயிலாகப் பல நீதிகளைச் சாத்தனுர் விளக்கியுள்ளார். பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும் முதலிய கருத்துக்களை விளக்குகின்ருர். பல அறங்களை எடுத்துரைக்கும் இந்த இரண்டு காப்பியங்களையும் தமிழ்ப் பெரு மக்கள் கற்றுணர்தல் வேண்டும் என்றெல்லாம் பேசினுர்.

அடுத்து தமிழ்நாடு செய்தித்துறை அமைச்சர் கனம் திரு. ஜி. பூவராகவன் B. Sc., (Hons.)அவர்கள் பெருங்காப்பியத் திருநாளில் சிறப்புரையாற்றினுர்கள்.

பெருங்காப்பியத் திருநாளை இங்கே கொண்டாடுவதுபற்றி நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பெருங்காப்பியங்களை

இவ்வாறு சுருங்கிய நேரத்தில் அநுபவிப்பதைவிடப் பல நாட்கள் சிந்தித்தல் வேண்டும். பட்டி தொட்டிகளிலெல்லாம் இத்தகு திருநாட்கள் பெருகுதல் வேண்டும். அப்போதுதான் நம்முடைய மொழி, இனம், சமுதாயம் பண்பட்டு உயரும் ஓங்கும். நம்நாட்டுக் காப்பியங்கள் சிறந்த நோக்கத்தை உடையவை. காப்பியங்களை நோக்கம் தெரிந்து கற்றல் வேண்டும். நம் காப்பியங்களுக்கும் மேலைநாட்டுக் காப்பியங் களுக்கும் நிறைய வேற்றுமை உண்டு. நம் நாட்டுக் காப்பியங் கள் கற்புக்குப் பெருமை தருபவை. மேலை நாட்டில் வீரம் மட்டுமே பேசப் பெறுகின்றது. நம் சிலப்பதிகாரம் கண்ணகி யினுடைய கற்பை, இராமாயணம் சீதையினுடைய கற்பை எடுத்து விளக்குவதை நாம் அறிதல் வேண்டும். இவ்வாறே ஒவ்வொன்றும் வால்மீகியினுடைய இராமகதையைத் தமிழ்ப் படுத்திய கம்பர், நம் நாட்டின் பண்பாட்டிற்கேற்பக் கம்ப இராமாயணத்தை இயற்றியுள்ளார். உதாரணமாகத் தாரையை வால்மீகி விளக்கியவாறின்றிக் கம்பர் சிறப்புறக் காட்டியுள்ளார். இவ்வாறு காப்பியங்கள் காட்டும் நெறியினை உணரவேண்டும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இத்தகைய சான்றோரைத் தரிசிப்பதற்கு வாய்ப்புத் தருகின்றது இத்திருவிழா என் றெல்லாம் அமைச்சர் பேசி, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர் களுக்குத் தம்முடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொண் டார்கள்.

பெருங்காப்பியத் திருநாளை ஆதீனத்தில் கொண்டாடுவது பெருமகிழ்ச்சிக்குரியது. இத்தகைய திருவிழாக்கள் பட்டிதொட்டி களிலெல்லாம் பரவவேண்டும். பெருங்காப்பியங்களில் வருகின்ற நீதிகளையெல்லாம் எடுத்துணரவேண்டும். மக்களுக்கு உணர்த் தினால்தான் தொண்டு மகத்தானதாக இருக்கும் என்றெல்லாம் கூறித் தமிழ் இனம், நாடு, சமுதாயம் வளர்வதற்கான தொண்டு களை விவரித்தார்கள்.

அடுத்துச் "சிந்தாமணி" பற்றிப் பேசிய திரு. ச. சிவ குமாரன் எம் ஏ., சிந்தாமணி உயர் காப்பியம் என்றும், அதிலுள்ள கதைச்சுருக்கம் இன்னதென்றும் சுருக்கமாகப் பேசிச் சில பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்கள்.

பின் இரவு 10 மணிக்குமேல் திருநெல்வேலி திரு. ஐயன் பிள்ளை குழுவினரின் வில்லுப்பாட்டு நடைபெற்றது. திரளான மக்கள் கூடியிருந்து கேட்டு மகிழ்ந்தார்கள்.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( சோபகிருதுஞு ஆனிமீ 1௳ முதல் 32௳ முடிய )
( 15—6—63 முதல் 16—7—63 முடிய )

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

அசுவதி நான்கு பாதங்களும் மிசிரபலனைத் தரும். அமைதியைக் கலைக்கும். வாழ்க்கையில் சிரமம் காட்டும். பரணி நான்கு பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் தெய்வபலத்தால் ஜயித்துவரும். தொழில் ஓங்கும். கிரகசுகம் உண்டுபண்ணும். கவலை நீங்கும். சனி, புதன் சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.**

விருஷபராசி 9 பாதங்களும் விசேஷ சௌகரியங்களை மேன்மேலும் உண்டாக்கும். நஷ்டமான பொருள் தானே வந்து சேரும். கீர்த்திபத்திரம் கிடைக்கச் செய்யும். சந்தோஷம் உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.**

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். தொழில் ஓங்கும். ஞாதிவர்க்க குறைகாட்டும். சுபாதிகளால் அதிக செலவினங்கள் ஏற்படச் செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

புனர்பூசம் நான்காம் பாதம் வித்யாவிருத்தியைத் தரும். உலகபிரசித்தியை உண்டுபண்ணும். ஆரோக்கியம் உண்டாகும்.

குடும்பம் ஓங்கும். பூசம் நான்கு பாதங்களும் அதிக செலவினங்களேயும் உண்டுபண்ணும். தொழில்மூலம் லாபம் குறைந்து காட்டும். மனக்கலக்கம் உண்டுபண்ணும். ஆயில்யம் நான்கு பாதங்களும் தெய்வபலத்தோடு பிரகாசிக்கும். வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாத காரியமெல்லாம் ஜயத்தோடும், லாபத்தோடும் நடக்கச்செய்யும். நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். இல்லறம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். ஸ்திரசுகவாஸம் உண்டுபண்ணும். உத்தியோக உயர்வும், மேலோர் பெரியோர்களுடைய அன்பும் உண்டாகும். இல்லறம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியுாராசி 9 பாதங்களும் தெய்வீகத் தன்மையோடு பிரகாசிக்கச் செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். சஞ்சாரம் உண்டு பண்ணும். உயர் பதவிகளைத் தரும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

## 7. துலாம் சித்திரை $\frac{1}{2}$, சுவாதி விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4, பாதங்கள் மிச்ரபலனைத்தரும். வரவு, செலவு சமமாகும். காரியங்களைத் தவக்கப்படுத்தும். சுவாதி நான்கு பாதங்களும் உலகபிரசித்தியை உண்டுபண்ணும். தெய்வபலம் பிரகாசிக்கும். எதிர்பாராத தனலாபத்தைத்தரும். ஆரோக்கியம் உண்டாகும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். தொழில்மூலம் அதிக லாபம் உண்டுபண்ணும். நூதனமான சேர்க்கைகளால் மனம் மாறுதல்காட்டும்; கிரகசுகம் உண்டாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். இடம் மாறச்செய்யும். உத்தியோக உயர்வைத் தரும். குடும்பத்

தில் மங்கள காரியங்கள் நடக்கச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

## 9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். வித்யாவிருத்தியாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். பந்து மித்ராதிகளால் நன்மை உண்டுபண்ணும்; குடும்பம் ஓங்கும். ஆரோக்யம் உண்டாகும். உத்தியோகத்தில் உயர் பதவிகளைத் தரும். மேலோர் பெரியோர் அன்பு உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9பாதங்களும் மிச்ர பலனைத்தரும். இடம் மாறச் செய்யும். ஆரோக்யம் உண்டுபண்ணும். கிரக சுகம் ஓங்கும். வரவு செலவு சமமாகும். காரியங்களில் தவக்கம் காட்டும். சனி, ஞாயிறு சுப மாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9பாதங்களும் உத்தியோக உயர்வை உண்டு பண்ணும். நஷ்டமான பொருள்கள் தானாக வந்து சேரும். சத்ருக்களை சரண் அடையச்செய்யும். துஷ்ட கிரகங்கள் விலகும், ஆரோக்யம் உண்டுபண்ணும் சகலகாரியங்களும் வெற்றி அடையச்செய்யும். ஞாயிறு புதன் சுபமாகும்.

குறிப்பு :- ஷ மாதம் உலகில் தெய்வபலம் பிரகாசித்துக் கொண்டு எதிர்நோக்கி நிற்கும் இயற்கை கோளாறுகள் ரூபமாக கிரகநிலைகளால் காட்டக்கூடிய துரிதங்களை விலக்கி உலகம் சுபிக்ஷமாகவும் இயற்கைகள் எல்லாம் கடவுள் ஆக்ஞைப்படி நெறிதவறுமல் எந்தெந்த காலத்தில் எவைவேண்டுமோ அவைகளை மிதமாய் அளித்துத் தனம் தான்யம் ஆரோக்கியம் பயநாசம் துர்பிக்ஷநிவாரணம் இவைகளைச் செய்துகொண்டு வரும் இதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் மேலே

குறிப்பிட்டபடி சகலசுகமும் தானகவே சரியாய் நடந்துவிட்டால் சகலமான மக்களும் தங்கள் தங்கள் இஷ்டப்படி நடந்துகொண்டு உத்சாகமடையலாமென்று நினைக்கக்கூடாது. எல்லா சுபங்களும் தென்னட்டிலும் வடபாரதத்திலும் அங்காங்கு பூர்வபுண்ணிய வசத்தால் சனித்த மகான்கள் இருந்துகொண்டு உலகக்ஷேமத்துக்காக பலவிதமாகப் பாடுபட்டு வருகிருர்கள். நமது காருண்ய ராஜாங்கத்தாரால் எப்படி உபதேசம் லௌகீகத்தில் செய்யப்படுகிறதோ அதற்குமேல் கோடி மடங்கு தெய்வபலத்தைப் பரப்பி அங்காங்கு கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள் மூலமாயும் மகாயஞ்ஞங்கள், லக்ஷம் கோடி அர்ச்சனைகள் மூலமாயும், தேவதைகளைத் திருப்திசெய்துகொண்டு சுபிட்சமடையவும் பரசக்கிரபயம் வராமலும் தடுத்துவருகிருர்கள். அதை மற்ற ஆஸ்திக மக்களும், ராஜாங்கமும் அனுசரித்து அதற்குவேண்டிய உபகாரங்களைச் செய்துகொடுத்து, உலகிலேயே நமது பாரத பூமியை முதன்மையாக நடத்திக்கொண்டுவர வேதாகம தர்ம சாஸ்திரங்களைப் புறக்கணிக்காமல் அதன்படி நடக்க வேத தர்ம பரிபாலனத்தை விடாமல் நடத்தும்படியாக சர்வேசுவரன் ஜனங்களின் மனத்திலும், ராஜாங்கத்தாரின் மனத்திலும் அருள் புரிவாராக.

சுபம்.

---


"ஞானசம்பந்தம்"

**சமய இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சைவசமயிகள் அனைவரும் பயிலவேண்டிய இதழ். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**ஆண்டுக் கையொப்பம்.**

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

சேயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமையாதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சைமாவட்டம்.

397

# திருக்குறள் - கருத்துரை

### [ பழனியங்கிரியார் எழுதியது ]

## 22. ஒப்புரவறிதல்

ஒருவர்க்குச் செய்யும் ஒப்புரவு அறிதல் நன்று

முறைவைப்பு :- கைம்மாறு, தாளாற்றித்தந்த, ஊருணி, பயன்மரம், மருந்தாகி, நயனுடையான், ஒத்தது, இடனில் பருவத்து, ஒப்புறவினல், புத்தேள்.

ஒருவன் முன்னே செய்த உதவிக்கு இவன் தானும் ஒரு உதவி செய்வோம் என்றது எத்தன்மைக்கு ஒக்கும் என்ருல், பூலோகத்தை இரட்சிக்கிர மழைக்கு உதவி செய்வோம் என்பதற்கு நிகராம். (1)

தான் தேடின உடமை இதுக்கு ஆம் என்னில் நல்லோர்க்கு ஒப்புரவு செய்யத் தேடியது என்று ஒப்புரவு செய்வான், (2)

வானெறி நிறைந்தால் ஒக்கும் அறிவுள்ளவனிடத்துச் செல்வம், வானெறியும் சகலர்க்கும் பிரயோசனப்படும். (3)

பயன்படும் மாமரம், பலாமரம், பனைமரம் ஒருவனைச் சுதந்திர மற்றதாகத் தன்னிலே பழுத்தற்கு ஒக்கும், நல்லோர்செல்வம். (4)

பிரத்தியட்சமான மருந்து மரம் நடுவூர்க்குள்ளே ஒருவன் சுதந்திரம் அற நின்றதற்கு ஒக்கும் நல்லோர் பெற்ற செல்வம்.

ஒப்புரவாளன் மிடித்தாலும் அற்பமாகிலும் ஒப்புரவு செய்வான், அகேதெனில் பெறுக்காறு விளைவித்து அவற்றினது வருவாய்க்கு ஊற்று நீர் கொடுப்பது போல. (6)

ஒப்புரவு செய்வார் உயிருடன் வாழ்வார். ஒப்புரவு அறியார் செத்தாரோடு ஒப்பர். (7)

ஒப்புரவினர் வகையற்ற இடத்தும் ஒப்புரவு குன்ருர். உலகத்திற் செய்யும் முறைமை அறிவர். (8)

ஒப்புரவினல் மிடிவருமாகில் தன்னை விற்ருகிலும் ஒப்புரவு செய்க. (9)

ஒப்புரவு போல ஒத்த இன்பம் அத்தெய்வலோகத்திலும் இல்லை. அது எப்படி என்றால் செய்வலோகத்தில் தான தன்மங் இயற்றல் உபகாரமில்லை. இந்த உலகத்தில் செய்த தன்ம தான பலத்தை அங்கே அனுபவிப்பதுள்ளது. (10)

## 23. ஈகை நன்று

ஒப்புரவாகிய முறைமையிலும் கொடுத்தலாகிய செயலேமேல்.

முறைவைப்பு :- வரியார்க்கு அற்றார், ஆற்றுவா, பாத்தூண், இரத்தலின், ஈத்துவக்கும், சாதலின், இன்னாது, இரவென்னும், நல்லாரென்னின்.

வறியவர்க்குக் கொடுப்பதே கொடை. மற்றதெல்லாம் வட்டிக்குக் கொடுப்பதை யொக்கும். (1)

பொருளையற்றார் பசி தீர்த்தல் ஒருவன் பொருள் பெற்றால் வைத்திருக்குமிடம் (2)

ஆற்றுவார் பசியாற்றலே பெரிது. அது சருகு புசித்து தவசு பண்ணுவாரினும் பெரியனும். அது எப்படி என்றால், சருகு புசிப்பார் ஒருவரையும் பசியாற்றமாற்றார். தன் ஆத்துமாவையும் ஒறுப்பார் ஆகையால் இவனுக்கு அவர்கள் சரியல்லர்.(3)

பசித்தவர் உண்டோ என்று பார்ப்பித்துக் கூட்டிக்கொண்டு பசியாற்றுவானை இம்மை மறுமைக்கும் பசிப்பிணி தீண்டாது.(4)

யாசித்தல் என்பது பொல்லாது. அதிலும் பொல்லாது தான் பெற்ற செல்வத்தைத் தானே புசித்தல். அது எப்படி என்றால் தேகி என்பவன் கொடுப்பார்க்கு புண்ணியத்தைக் கொடுத்தான். இவன் தனக்குப் பாவமே தேடினான். ஆகவே இவனுக்குச் சரியல்ல. (5)

கொடுத்து அதனால் வரும் இன்பம் அறியார் ஆரென்னில் உடைமை தேடிவைத்து தானும் பொசியாமல் பாழே கொடுப்பார்.

மரணம் என்று சொல்லுகின்ற துயர மிகுதியதிலும் நன்று கொடாமல் விளைள் கழித்தல். (7)

தேகி என்பது பொல்லாது எவ்வளவு என்னில், தாதாவான வன் முகங்காணுமளவும், தாதாவானவன் நகைமுகங் கண்டால் துயரம் கெடும். (8)

தன்னிடத்தே பெற்றவன் பிறரிடத்திலேபோய் எனக்கென்று சொல்லாமல் மிடிதீரக் கொடுப்பது குடிப்பிறந்தார்க்கு உளதாம்.

இயற்கையிலே பெற்ருல் புண்ணியம் உண்டு என்று சொன்னுலும் ஏற்பது பொல்லாது. ஈகையிலே கொடுத்தார் நரகமென்ருலும் கொடுத்தலே நன்று. (10)

## 24. புகழ் நன்று

பிறந்தால் கீர்த்தியுடனே வாழவேண்டும்.

முறைவைப்பு :- தோன்றின், ஈதல்இசைபட, ஒன்ரு உலகத்து, நிலவரை, உரைப்பார், புகழ், வசையென்ப, வசையிலா, நத்தம்போற், வசையொழிய.

பிறந்தால் புகழுடனே வாழவேண்டும். அந்த நெறியில்லாதார் பிறத்தலின் பிறவாமல் இருத்தலே நன்று, (1)

ஆத்துமாவுக்குப் பயன் தேகி என்பவர்க்குக் கொடுப்பதும், புகழுடன் வாழ்வதும் அல்லது வேருெரு பயன் இல்லை. (2)

ஒன்ரு உலகத்தில் மிகுத்த புகழல்லாது நில்லாது ஆதலால் மிகுத்த புகழைத் தேடுவான் நன்று. (3)

பூமியிலே பிறந்தார் புகழுடனே வாழ்வாராயின் தேவர்களைத் தெய்லோகத்தார் போற்ருர். பூமியிலுள்ளாரைப்போற்றுவார். (4)

சொல்லுவார் சொல்லுவ தெல்லாம் தேகி என்பார்க்குக் கொடுப்பார் மேல் புகழ். (5)

புகழ்பட வாழவேண்டும் என்று தங்களை நோவார்கள். தம்மை இகழ்வாரை விதனப்படுவார்கள். (6)

கீர்த்தியுடனே வாழ்வது அறியாதார் பெறுவது ஏதென்னில் வசைபெறுவர்.

வசையற்ற பயன் குன்றிவிடும் கீர்த்தியை வேண்டாதான் இருந்தபதி. (8)

சங்காயிரம் சூழ வாழ்ந்து வலம்புரிபோலே கிளையானது தன்னைச் சூழ வாழ்வது கீர்த்திமானுக்கு நகைவரும். (9)

வசையில்லாமல் வாழ்கிறது வாழ்வதற்கு லட்சணம் அது வன்றி எவ்விதத்தையும் புத்தியுடனும் வாழ்கிறது அதிலும் பெரியது. (10)

## 25. அருளுடைமை

அருளுடைமையாவது வானப்பிரஸ்தம்.

முறைவைப்பு :- அருள்சேர்ந்த, மன்னுயிரோம்பி, நல்லாற்ருல் அல்லல், பொருள் நீங்கி, பொருளற்ருர், அருட்செல்வம், வலியார்முன், தெருளாதான், அருளில் லார்க்கு.

சர்வரிடத்திலும் கிருபையானவர்க்கு நரகலோகம் இல்லை தெய்வலோகம் சித்திக்கும். (1)

தன்னுயிர்போலே எல்லாரையும் பரிந்து பார்த்து நடப் பார்க்கு எந்தக் காலத்திலும் வினை இல்லை, (2)

நல்லநெறி ஏதென்று விசாரிக்கில் எல்லார்க்கும் கிருபையே பெரிது. (3)

கிலேசமும் அருளை விரும்பினுரிடத்து வராது அதற்கு வாயு விளங்கும் பூமி. (4)

சத்தியத்தைச் சேராமல் பொய்நெறி ஒழுகுவார் அருளை நீங்கி கொடுவித்தொழிலைச் செய்வார். (5)

பொருளற்ருர் ஒரு காலத்திலே செல்வராவார் அருளற்ருர் நரகத்து மாக்களாவர். (6)

செல்வமாவது மெய், வாய், கண், மூக்கு, செவி யென்க. இதற் பெரிய செல்வம் அருட்செல்வம் என்க. பொருட் செல்வம் அருளிலாதாரிடத்தும் உண்டென்றறிக. (7)

தான் தனக்குஎளியார்மேல்கோபிக்கும் கோபத்தைத் தனக்கு வலியாரிடத்திலே சென்றறிக, (8)

குழந்தை கையில் மாணிக்கம் என்றறிக அறிவில்லாதான் செய்யும் தர்மம். (9)

அருளில்லார்க்குத் தெய்வலோகம் இல்லை பொருளில்லா தார்க்கு இவ்வுலகம் இல்லை. (10)

(தொடரும்)

## குன்றக்குடி மகாசந்நிதானம் வருகை

திருவண்ணாமலையாதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 9—6—63 ஞாயிற்றுக்கிழமை மாலை தருமையாதீனத்திற்கு எழுந்தருளி ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் தொடக்கவுரையாற்றினார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களையும், ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கல்யாணக் கோலத்தையும் கண்டுகளித்தார்கள்.

## அமைச்சர் வருகை

சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர் கனம் திரு. ஜி. பூவராகவன் B. Sc, (Hons.) அவர்கள் 9—6—63 ஞாயிற்றுக்கிழமை காலை தருமையாதீனத்திற்கு வருகை புரிந்தார்கள். ஆதீனத்தில் ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தையும் தரிசித்தார்கள். மாலையில் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவியைத் தரிசித்துப் பின் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி அன்பர்களை மகிழ்வித்தார்கள்.

## சபாநாயகர் வருகை

சென்னை மாநில சட்டசபை சபாநாயகர் கனம் திரு. எஸ். செல்லபாண்டியன் பி. ஏ., பி. எல்., அவர்கள் 8—6—63 சனிக்கிழமை மாலை தருமையாதீனத்தில் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மியையும் ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானையும் வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியையும் தரிசித்தார்கள். திருநெறியதெய்வத் தமிழ்மாநாட்டில் சமய வரலாற்றுத் திருநாளில் சிறந்த முறையில் தொடக்கவுரையாற்றினார்கள்.

## அறநிலைய கமிஷ்னர் வருகை

சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையர் உயர்திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் 10—6—63 திங்கட்கிழமை மாலை தருமைக்கு வருகை புரிந்தார்கள். ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவியையும் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானையும் வழிபட்டார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களைத் தரிசித்து திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டின் பிரபந்தத் திருநாளில் தொடக்கவுரையாற்றினார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திரு. கமிஷ்னர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியருளினார்கள்.

இலவசத் தமிழ்க்கல்வி! இடம்பெற முந்துமின்!

*

# தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

[ 57, மகாதானவீதி, மாயூரம். ]

கல்லூரித் திறப்புநாள் : 26—6—63.

*

**முழு வெற்றி :**

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளால் தோற்றுவிக்கப் பெற்று இயங்கிவரும் இக்கல்லூரியில் 1963 மார்ச்சு வித்துவான் தேர்வு எழுதிய மாணவர்கள் 100% வெற்றிபெற்று உயர்வகுப்புக்களும் எய்தியுள்ளார்கள்.

**விண்ணப்பம் அனுப்புவோர்க்கு :**

தமிழ் வித்துவான் முதலாண்டில் சேரவிரும்பும் மாணவர்கள் (S. S. L. C. eligible, வித்துவான் புதுமுகம், புலவர் புகுமுகம் தேறியவர்கள்) 15 ந. பை. தபால் தலையுடன் முதல்வர்க்கு எழுதி விண்ணப்ப பாரம் பெறலாம். எல்லா வகுப்புக்களிலும் மாணவ மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்பெறுவர்.

*

முதல்வர்,

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.


Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram). 10–6–63.